கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய
கலாச்சார ஒன்றியம்-கனடா

G.P.S. இன்

பொங்கல் மாலைப்பொழுது

ஞானபாஸ்கரோதய சங்கம்
ஸ்தாபிதம் 1919
ESTD 1919
Gnanapaskarothaya Sangam

யூலை 2007 ஜனவரி 2011

5வது ஆண்டு சிறப்பு மலர்





கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய
கலாச்சார ஒன்றியம்-கனடா

ஞானபாஸ்கரோதய சங்கம்
ESTD 1919
Gnanapaskarothaya Sangam

www.kalviyankadu.com

ஞான பாஸ்கரோதய சங்க கீதம்

இராகம்: பேஹக் தாளம்: ஆதி

ஞான பாஸ்கர உதய சங்கம்
அறிவுச் செங்கதிர் எழுச்சி மன்றம்-

(ஞான பாஸ்கர)

தமிழர சோங்கிய கள்ளியங் காட்டில்
சமரச உணர்வினை நாடிடும் சங்கம்-

(ஞான பாஸ்கர)

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
நடுவு நிலைமை நாடிடும் மன்றம்
யாதும் ஊராய் யாவரும் உறவாய்
எழுமின் விழிமின் என்பதிம் மன்றம்-

(ஞான பாஸ்கர)

சாலிவாகன சகாப்த வருடம்
ஆயிரத் தெண்ணூற்று நாற்பத்திரண்டில்
சித்தார்த்தி ஆண்டு சீர்பெறப் பிறந்து
சேவைகள் திறம்பட ஆற்றிடும் மன்றம்
வாழ்க! வாழ்க!! வாழியவே!!!

ஞானபாஸ்கர உதய சங்கம்
வாழ்க! வாழ்க!! வாழியவே!!!

கவிதை ஆக்கம்: கவிஞர் இ. முருகையன். பி.எஸ்ஸி. எம்.ஏ
இசை அமைப்பு: ஐ. வேலாயுதபிள்ளை. சங்கீதபூஷணம்.
தயாரிப்பு: திருமதி. ஜெயராணி சிவபாலன். சங்கீத பூஷணம்.

தமிழ்த்தாய் வாழ்த்து!

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந் தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழி
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

கனடா கீதம்!

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள்
உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நின் எழில் கண்டு உவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நினைப் போற்றி அணிவகுத்தோம்!
எம் நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா நாம் நினைப் போற்றி
அணிவகுத்தோம்!

ஓ கனடா! நாம் நினைப் போற்றி
அணிவகுத்தோம்!

Official Lyrics of O Canada!

O Canada!
Our home and native land!
True patriot love in all thy sons command.
With glowing hearts we see thee rise,
The True North strong and free!
From far and wide,
O Canada, we stand on guard for thee.
God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்-கனடா

நடப்பு வருட நிர்வாகசபை உறுப்பினர்கள்.
(27.03.2011 தொடக்கம் இன்று வரை)

தலைவர்:	திரு.நடராஜா ஜெயக்குமார்
உப-தலைவர்:	திரு.நித்தியானந்தன் கிரிதரன்
செயலாளர்:	திரு.வேலாயுதபிள்ளை சுரேஸ்குமார்
உப-செயளாலர்:	திரு.சுப்பிரமணியம் தயாபரன்
பொருளாளர்:	திரு.சின்னத்தம்பி பரஞ்சோதி
உப-பொருளாளர்:	திரு.சிதம்பரப்பிள்ளை புஸ்பராசா

உறுப்பினர்கள்:

திரு.சிவப்பிரகாசம் மதிவர்ணன்
திரு.பாலசுப்பிரமணியம் அருண்
திரு.நடராஜா ஜெகன்
திரு.தர்மகுலசிங்கம் பாஸ்கரன்
திரு.பேரம்பலம் தயாளன்
திரு.வேலாயுதபிள்ளை சுரேந்திரன்
திரு.துரைமணி சந்துரு
திரு.சீவரெட்ணம் மகேசரட்ணம் (பாபு)
திரு.சிவலிங்கம் முகுந்தன்

கணக்காய்வாளர்கள்:

திரு.தேவராசா கஜன்
திரு.மகாதேவா செல்வரட்ணம்

இணையத்தளச் செயற்பாட்டுக் குழு:

திரு.சிதம்பரப்பிள்ளை புஸ்பராசா
திரு.நடராஜா ஜெகன்
திரு.பேரம்பலம் தயாளன்

காப்பாளர்கள்:
திரு.சுப்பையா கணேஸ்.
திரு.தம்பையா சம்பந்தர்
திரு.நடராசா புவனேந்திரன்
திரு.குமரேசு புஸ்பராசா
திரு.நாகராசா மனோகரன்

நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2011



நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திரு. சி. மதிவர்ணன், திரு. சீ. மகேசரட்ணம், திரு. வே. சுரேந்திரன், திரு. ந. புவனேந்திரன்
திரு. த. சம்பந்தர், திரு. சு. கணேஸ், திரு. ம. செல்வரட்ணம், திரு. ந. ஜெகன், திரு. பா. அருண், திரு. பே. தயாளன்
இருப்பவர்கள் இடமிருந்து வலம்: நி. கிரிதரன், திரு. சி. பரஞ்சோதி, திரு. ந. ஜெயக்குமார், திரு. வே. சுரேஸ்குமார்
திரு. சி. புஸ்பராசா, திரு. சு. தயாபரன்


APPLEMORE
AUTOMOTIVE INC.
Complete Body Works
Maintenance & Repairs
Safety Certification
Under Coating & Rust Proofing
Interior & Exteroir Cleaning
Motor Shampoo
All Exhaust Repair
Air Condition & Repair
உங்களுக்கு துரிதமாகவும்,
செம்மையாகவும், நிறைவாகவும் திருத்தி
உதவிட உங்கள் வாகனங்களை
எம்மிடம் எடுத்து வாருங்கள்
Bodyshop
ONTARIO'S
DRIVE
CLEAN
Ontario Drive Clean &
Repair Facility
குறைந்த விலையில்......
குறைந்த காலத்தில்......
குறையில்லாது செய்து
தருகின்றோம்.
S MA 6306
New Location
with ample of
parking
Tel: 416-285-4998
Fax: 416-285-7771
435 Midwest Road,
Scarborough. ON.



தலைவரிடமிருந்து-------

எம் இனிய கனடா வாழ்
கல்வியங்காடு மண்ணின் உறவுகளே!

பிறந்த மண்ணின் சுகந்தங்களை முகர்ந்து மகிழ்ந்திடும் நன்னாளாக நம் கடந்த கால வாழ்வில் பிறந்து, ஓடி வளர்ந்த தாயக மண்ணின் நினைவுகளை மீட்டு எடுக்கும் நிகழ்வாக இப்புலம்பெயர்ந்த பனிப்படலம் மிகுந்த கனடா தேசத்தில் கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்-கனடா என்னும் எங்கள் யாவரினையும் ஒன்று சேர்ந்த பொது அமைப்பின் கீழ் இக் கலைவிழாவில் முதல் முறையாக சந்திக்கின்றோம்.


2007ஆம் ஆண்டு கனடா வாழ் கல்வியங்காடு மக்களை ஒன்று சேர்த்து ஆரம்பிக்கப்பட்டு சட்டரீதியாக ஒரு சமூக நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு சந்திக்கும் முதல் கலை நிகழ்வு இதுவேயாகும்.

இது ஒரு ஆரம்பம்! இதன் முன்னேற்றகரமான உயர்வுகளின் தொடர்ச்சி எம்மூரவர்கள் ஒவ்வொருவரினதும் கரங்களில் தங்கியுள்ளது. கடந்த வருடங்களில் எங்கள் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட கோடைகால ஒன்று கூடலின்போது,

--வெற்றி கேடயங்கள்
--பரிசுப் பொருட்கள்
--நிதி உதவிகள்
--சரீர உதவிகள்

தந்து சிறப்பாக கை கொடுத்த ஏராளமான உங்கள் யாவரினதும் கரங்கள்! அதன் வலிமை! என்றுமே மறக்கமுடியாதவை! கனடாவில் நாம் கை கோர்க்கும் வலிமை தாயக மண்ணில் நாம் பிறந்த கிராமத்தினை நோக்கி நீட்ட வேண்டும். ஒன்றுகூடல் கலைநிகழ்வுகளில் நாம் சேர்க்கும் சிறு சிறு உதவிகள் தாயகத்தில் எம்மூரவர்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்ட வேண்டும். தாங்கள் வழங்கும் சிறுசிறுதுளிகள் பெரு வெள்ளமாக பெருக்கெடுத்து எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு கைகொடுக்கவேண்டும்

இது தொடர வேண்டும்! அதுவே நம் பிரார்த்தனை



அன்புடன்
திரு. நடராஜா ஜெயக்குமார்
தலைவர்
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா


Ranjana
Jewellers & Pawn Brokers
ரஜனிகாந்த் - புவனேந்திரன்
நீங்கள் விரும்பும் தங்க நகைகளை
உங்கள் விருப்பம் போல் புதிய டிசைனில்
செய்து கொள்ளவும்,
சகல விதமான திருத்த வேலைகள் மற்றும்
தாலி கொடி ஆகியவற்றையும், தரமாக
நியாயமான விலையில்
உடன் செய்து கொள்ளவும்,
மற்றும்
துரித பணமாற்று சேவை
MoneyGram
International Money Transfer
தரமான தங்க நகைகள்
வாங்க விற்க
மற்றும் அடகு தேவைகளுக்கும்
நாடுங்கள்
ரஞ்சனா ஜீவலர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற நகை அடகு மாடம்
Tel: 647 247 2868
6055-108 Steeles Ave E, Toronto, ONT

செயலாளரின் சிந்தனையிலிருந்து....



"கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்-கனடா" என்ற நம்மூரவர்களை கனடாவில் ஒன்றிணைந்த எங்கள் அமைப்பினை சற்று பின்னோக்கி பார்க்கிறேன்.

- தாயகத்தில் நாம் பிறந்து வளர்ந்த எங்கள் ஊர்.
- அங்கு வாழும் எம்மக்கள்.
- நூற்றாண்டு காலத்தினை அண்மிக்கும் ஞான பாஸ்கரோதய சங்கம்
- ஆன்மீக ஒளிபரப்பி அருள்பாலிக்கும் வீரபத்திரர் ஆலயம்!

இவை யாவற்றுக்கும் கனடாவிலிருந்து நாம் கை கொடுக்க வேண்டுமானால் நாம் செய்யவேண்டியது எங்கள் யாவரினது கரங்களையும் ஒன்றாக குவிக்க வேண்டும். இதே சிந்தனை பலருக்கும் எழுந்தது என்பதில் சந்தேகமேயில்லை.

இச் சிந்தனைகள் கற்பனைகள் யாவற்றுக்கும் செயல் வடிவம் கொடுக்க முன்வந்தவர்கள் பலர். அதில் முக்கியமானவர்கள் திரு.சுப்பையா கணேஷ், திரு.தம்பையா சம்பந்தர், திரு.மகாதேவா செல்வரத்தினம், திரு.நடராஜா புவனேந்திரன் இவர்களுக்கு பின்னால் பலரின் கை கொடுப்பு!

2007ஆம் ஆண்டு ரொரன்ரோவில் உதயமாகி சட்டரீதியான பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. ஆரம்ப தலைவர் திரு.புஸ்பராஜா குமரேசு அவர்களின் உழைப்பும், அவரது நிர்வாக சபை அங்கத்தவர்களின் திறைமையாலும் வருடாவருடம் கூடிய அங்கத்தவர்களைச் சேர்த்ததுடன் குறிப்பாக இளைஞர்களையும் எமது ஒன்றியத்துடன் ஈடுபடவைத்தனர்.

கடந்த மார்ச் 2011 இல் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டபோது நிர்வாகசபையில் கூடுதலாக இளைஞர்கள் தெரிவுசெய்ப்பட்டனர். இந்த நிர்வாகத்தின் பிரதான இரண்டு நோக்கம்:


(1) எமது ஒன்றியத்தை திறம்பட நடாத்துவது
(2) உலகம் வாழ் கல்வியங்காடு மக்களை ஒன்றிணைப்பது

இதற்காக திரு.சி. புஸ்பராசா (ராசன்) தலைமையில் இணையத்தள குழு உருவாக்கப்பட்டது. அவர்கள் இணையத்தளத்தை உருவாக்கிய திருமதி. அனுசுயா புஸ்பராசா (திரு. தங்கராசாவின் மகள்), சமூக இணையத்தினை (Face Book) உருவாக்கி நடாத்தி வந்த திருமதி. மகிழினி அருள்செல்வம் (திரு. நித்தியானந்தனின் மகள்), திருமதி. சங்கீதா துஷ்யாந்தன் (திரு. முத்துலிங்கத்தின் மகள்), திருமதி. ஸ்ரீகலைச்செல்வி சிவசுதன் (திரு. கனகரத்தினத்தின் மகள்) ஆகியோருடன் தொடர்பு கொண்டு எமது ஒன்றியத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

எமது ஒன்றியம் 2007ம் ஆண்டு தொடக்கம் வருடாவருடம் கோடைகால ஒன்றுகூடல் விளையாட்டு போட்டிகளை சிறப்பாக நடத்தி வருகின்றது. அத்துடன் எமது சகோதர சங்கமாகிய மொன்றியலில் உள்ள கல்வியங்காடு மக்கள் சங்கம் நடத்தி வரும் திருமுருகன் தேர்திருவிழாவிற்கு எமது ஒன்றியம் ஒத்துழைப்பு அளித்து வருகின்றது. அத்துடன் எமது அங்கத்தவர்கள் ஊர் மக்களின் இழப்பின் போதும் அவர்தம் உறவுகளின் இழப்பின் போதும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும் எமது இணையத்தளத்தில் பிரசுரித்தும் எமது அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறோம்.

நாம் இவை மாத்திரமன்றி எம் தாயகத்தில் உள்ள வீரபத்திர் ஆலயத்திற்க்கும், எம் உறவுகளுக்கும், வன்னியில் உள்ள துன்ப துயரங்களுக்கு ஆளாகியுள்ள சிறுவர்களுக்கும் எங்களாலான உதவிகள் செய்து கொண்டிருக்கிறோம்.

இறுதியாக எமது ஒன்றியத்தின் செயல் பாட்டிற்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த ஊர் மக்கள், அங்கத்தவர்கள், வர்த்தகர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுவதோடு, மேலும் எமது ஒன்றியத்தின் பணிகள் தொடர அனைவரினதும் ஒத்துழைப்பும், நல்லாசிகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.



அன்புடன்
திரு. சுரேஷ்குமார் வேலாயுதபிள்ளை
செயலாளர்.
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா
கலாச்சார ஒன்றியம். (கனடா)


Looking for information about Life Insurance and our affiliated companies in your area.
ஊரோடு உறவாடும்
உங்கள் நண்பன்
• Life Insurance
• Disability Insurance
• Critical Illness Insurance
• Mortgage Protection Insurance
• Non-Medical Insurance
• Travel Insurance
• RESP/RRSP
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES
Assumption Life
Unity Life of Canada
RBC Insurance
RBC
Equitable Life of Canada
ASSURANT
UL Mutual
Empire Life
Manulife Financial
Desjardins
Canada Life
Sun Life Financial
416-558-2551
Protect Your Family With Affordable Insurance Products

பொருளாளரின் அறிக்கையிலிருந்து!



எனது அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! எமது ஒன்றியத்தின் 5வது ஆண்டு விழாச் சிறப்பு மலரூடாக தங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்வு அடைகிறேன்.

"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு"

எனும் திருக்குறளில் இந்தவையகத்தில் இன்புற்றவர்களின் சிறப்பெல்லாம் அவர் அன்புகொண்டு வாழ்ந்த வாழ்வினால் வந்த பயனே என்பார்கள். அதற்கமைய எமது நிர்வாக சபையும் பொதுச்சபையும் ஒருவர் பால் ஒருவர் அன்புடன் இவ் கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய கலாச்சார ஒன்றியத்தினை நடாத்தி வருகிறோம். எமது வாழ்வின் குடும்பம் வேலை காலநிலை போன்ற விடயங்களை கவனித்ததோடும் எமது ஒன்றியத்தையும் எமது மனதிருப்திக்காகவும் எங்களால் எமது சமூகம் இங்கும் தாயகத்திலும் பயன் பெற வேண்டும் எனும் கூரிய நோக்கத்திலும் செயல்படுகிறோம்.


கனடாவில் ஒன்று கூடல்களையும் தாயகத்தில் வறிய பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதியும் வழங்கி வருகிறோம். இவ் விபரம் எமது மலரில் இணைத்துள்ளோம். 30 வருடங்களாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக இலங்கையில் வட-கிழக்கில் பாதிக்கப்பட்ட தாய் தந்தையரை இழந்த கல்வியில் ஊக்கமுள்ள மாணவர்களுக்கு கனடா வன்னித் தமிழ்கலாச்சார அமையத்தின் புலமைப்பரிசில் குழு உறுப்பினரான சகோதரர் திரு கா.யோகநாதன் அவர்களின் ஊடாக தாயகத்திலிருந்து எம்.ஐ.குரூஸ் வடபகுதிக்கும் திரு த. தயாபரன் கிழக்கு பகுதிக்கும் நியமித்து ஒழுங்கான முறையில் நடத்திவருகிறார்கள்.

மேற்படி திட்டமானது ஒழுங்கான கட்டமைப்பில் செயல்படுகிறது என்பதை உணர்ந்த பின் எமது சங்க மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திருமதி. நடராஜா தங்கேஸ்வரி அவர்களால் ஆரம்பித்த இத்திட்டமானது இப்போது எமது சங்க உறுப்பினர்களால் 23 குடும்பங்களை சேர்ந்த தாய் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு படிப்பு செலவுக்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் மாதம் 1500 ரூபா வீதம் ஆறுமாதங்களுக்குரிய பணத்தை வைப்பில் இட்டுள்ளோம். இத்தொகை மேலும் அதிகரிக்க தங்களின் உதவியை கோருகிறோம்.

இத்துடன் நின்றுவிடாமல் எமது ஒன்றியத்தின் உப தலைவர் திரு. நித்தியானந்தன் கிரிதரன் அவர்களின் நேரடி வழிகாட்டலில் எமது கிராமத்தில் புலமைப்பரீட்சையில் சித்தி அடைந்த செல்வி பிரணவி ஜெயமோகன் என்பவருக்கு படிப்புக்கு ஊக்குவிப்பு தொகையாக 120000 ரூபாவை வங்கியில் வைப்பில் இட்டு அதன்மூலம் வரும் வட்டிப்பணத்தை மாதாமாதம் படிப்பு செலவுக்கு பயன் படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் செய்துள்ளோம்.

பலர் எமமுடன் இணைந்து செயல்பட காத்திருக்கிறார்கள். இது காலத்தின் தேவை என கருதி அனைவரும் செய்ய வேண்டிய பணி என்று கூறி அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுகிறேன்.

சின்னத்தம்பி பரஞ்சோதி
பொருளாளர்
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா
கலாச்சார ஒன்றியம். (கனடா)



Happy New Year!

2012

When is the good time to buy a house in Greater Toronto?

HISTORIC ANNUAL STATISTICS

YEAR	SALES	AVERAGE PRICE
2000	58,343	$243,255
2001	67,612	$251,508
2002	74,759	$275,231
2003	78,898	$293,067
2004	83,501	$315,231
2005	84,145	$335,907
2006	83,084	$351,941
2007	93,193	$376,236
2008	74,552	$379,347
2009	87,308	$395,460
2010	86,000	$431,250

2011 MONTHLY STATISTICS

January	4,208	$425,903
February	6,074	$452,967
March	9,009	$455,886
April	8,783	$476,637
May	9,784	$485,453
June	9,972	$474,259
July	7,695	$458,798
August	7,351	$450,920
September	7,494	$464,842
October	7,642	$478,137
November	-	-
December	-	-
Year-to-Date	**78,012**	**$465,294**

Don't wait too Long !!!! House price are going up every year.



THAYA SUBRAMANIAM
Sales Representative
Master Silver Award (2007- 2010)
416 786 8048
tsubramaniam@trebnet.com

Century 21
King's Quay Real Estate Inc.
Brokerage
Independenly Owned And operated
HomeExpertTeam.com
Century21.ca/Thaya.Subramaniam
Bus: 905-940-3428 Fax: 905-940-0293
7300 Warden Ave, Suite 401 Markham, ON L3R 9Z6

Ontario

Premier of Ontario - Premier ministre de l'Ontario



January 7, 2012

A PERSONAL MESSAGE FROM THE PREMIER

On behalf of the Government of Ontario, I am delighted to extend warm greetings to everyone attending Pongal Maali Poluthu, hosted by the Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association – Canada.

Ontarians are privileged to be able to draw on the cultural diversity that enriches and strengthens the province we are proud to call home. I would like to take this opportunity to commend the Tamil-Hindu community for its contributions to Ontario — and Canada as a whole.

Pongal Maali Poluthu celebrates the prosperity that a bountiful harvest brings. It also reinforces the spirit of hope, optimism and solidarity that we feel at this time of renewal and fresh beginnings — and reminds us of the potential we all share as Ontarians and Canadians.

Please accept my best wishes for an enjoyable and inspiring evening.

Dalton McGuinty

Dalton McGuinty
Premier


FRUITERIE
A.M.R

Mayor Rob Ford



A Message from the Mayor

It gives me great pleasure to extend greetings and a warm welcome to everyone attending the *Pongal Maali Poluthu* hosted by the Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association.

The Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association is comprised of former residents of Kalviyankadu, Sri Lanka who now reside in Canada. The organization connects members of the community who are committed to preserving and sharing their rich culture and heritage.

Tonight's event celebrates Thai Pongal, a Tamil-Hindu thanksgiving festival to honour the Sun for a bountiful harvest. This event is also the Association's first reunion and is an opportunity to bring families and friends together for an enjoyable evening of music, dance and drama.

Toronto is one of the world's most multicultural cities and I am pleased that events such as these showcase the many diverse communities that make our city a vibrant and unique place to live and visit.

On behalf of Toronto City Council, please accept my best wishes for a memorable evening.

Yours truly,

Rob Ford

Mayor Rob Ford
City of Toronto

OFFICE OF THE MAYOR
100 QUEEN STREET WEST, TORONTO, ONTARIO, M5H 2N2

LIBERAL LEADER

CANADA

CHEF LIBÉRAL

Pongal Maali Poluthu

It is my great pleasure to extend greetings to everyone attending Pongal Maali Poluthu in celebration of the festival of Thai Pongal. I would like to thank the Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association for all the hard work put into making this event a success.

Thai Pongal is a harvest festival celebrated by the Tamil community both here in Canada as well as around the world, and even though January days are short in Canada, we can all appreciate and welcome the return of the sun. This festivals focus on new opportunities; the richness of the land; and bounty of the harvest are all facets that we understand and share in Canadian society. For that reason, Thai Pongal provides a wonderful opportunity for reflection upon our shared values which ultimately strengthen our communities and Canada as a whole.

Moreover, it is important to note that tonight's event is not only a celebration of Thai Pongal, but of Tamil culture and heritage. This is a testament to Canada's diverse cultural fabric and the importance of celebrating our multicultural traditions.

Once again, I would like to thank all of tonight's performers for showcasing their talents. On behalf of the Liberal Party of Canada and our Parliamentary Caucus, please accept my best wishes for a wonderful festival.



The Honourable Bob Rae, P.C., O.C., M.P.
2011

Room 533-S. Centre Block / Pièce 533-S. édifice du Centre
House of Commons / Chambre des communes
Ottawa (Ontario) K1A 0A6


Bubbles Auto Wash
Hand Car Wash & Detail
Open 7 Days
Asok 647.706.7844 / Arun 416.879.1490
435 Midwest Road. Unit #A5 Scarborough, ON. M1P 3A6 (Midland & Ellesmere)
Interior Steam & Shampoo Cleaning, Engine Wash & Shine, Salt Removal, Rust Proof, Under Coating,
Audio, Video & Alarm Installation, Safety & Emission


RISSI AUTO
Parts, Auto Repair & Body Work
HH MF 442
PREAM
Tel: 416 335-8295
Cell: 416 988-4182
90 Melford Drive,
Unit 10, Scarborough, ON. M1B 2A1



Rathika Sitsabaiesan, MP
Scarborough-Rouge River

719 Confederation Building
House of Commons
Ottawa, ON
K1A 0A6

Tel: 613-996-9681
Fax: 613-996-6643

07 January, 2012

Dear Friends,

It is my pleasure to extend my sincere greetings on this joyous evening to celebrate the 2012 Pongal festival (Pongal Maali Poluthu).

Pongal is a special time for Tamils all over the world and organizations such as the Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association highlight this occasion so beautifully, not just to the Tamil community in Scarborough, but across Canada. Though artistic and cultural events, Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association helps create a sense of community and inclusion within the Tamil community by solidifying your cultural roots while celebrating the wonderful multicultural country of Canada. Pongal is the ideal time to celebrate your wonderful work.

I congratulate the Board of Directors and members for your dedicated contribution to our community and wish that your Pongal celebration is truly momentous one.

Kind regards,

R Sitsabaiesan MP

Rathika Sitsabaiesan, M.P
Scarborough-Rouge River

Rathika.Sitsabaiesan@parl.gc.ca


FOR ALL YOUR INSURANCE NEEDS
Life Insurance
Disability Insurance
Critical Illness Insurance
Non-Medical Insurance
Travel Insurance
Mortgage Insurance
RRSP / RESP
Sharmi Neleishkumar
Insurance Advisor
905.391.6795
MEGA Financial Group
INDUSTRIAL ALLIANCE
UL Mutual
Assumption Life
Equitable Life of Canada
Desjardins
ASSURANT
RBC Insurance
Empire Life
Canada Life
Manulife Financial
Sun Life Financial

MARKHAM

Logan Kanapathi
Councillor - Ward 7

January 7, 2011



MESSAGE FROM MARKHAM COUNCILLOR WARD 7

On behalf of Members of Council I am very pleased to extend my best wishes and greetings to the Kalviyankadu Gnanapaskarothaya Cultural Association on the occasion of "PONGAL MAALAI POLUTHU" on January 7, 2012.

As a Councillor of Markham the most ethnically diverse community in all of Canada, I'm proud of your initiative in coming together as a village organization to celebrate the most important festival of Tamils, Thai Pongal, the Harvest Festival of our traditional motherland. Strong moral values and rich culture are essential to build sustainable communities. Our traditional values have taught us strong moral values which shape our identity. Our Tamil heritage will successfully pass on to the next generation through your village organization's leadership in preserving our values and rich Tamil heritage.

I am proud of your efforts to be a strong unitary force in the Tamil community. I wish you continued success in all your future endeavours as your organization continues to grow and contribute to the beautiful diversity of our country.

Sincerely,

Logan Kanapathi
Councillor Ward 7

The Corporation of the Town of Markham, Anthony Roman Centre, 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel. 905.479.7748 • Fax: 905.479.7763 • lkanapathi@markham.ca • www.markham.ca

ஞானபாஸ்கரோதய சங்க வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மண்ணிலே கல்வியங்காடு கிராமத்தில் "ஞான பாஸ்கரோதய சங்கம்" என ஸ்தாபிக்கப் பெற்ற சங்கம் எமது கிராமத்தின் இளைஞர்களை பல துறைகளிலும் சிறந்து விளங்க ஒரு தளமாக இருந்தது. இலங்கையிலேற்பட்ட சீரற்ற நிலைமையினால் எமது மக்கள் குடிபெயர்ந்து வேறு நாடுகளில் தஞ்சமடையும் நிலை ஏற்பட்டது. அந்த வகையிலே கனடாவில் குடியமர்ந்த எமது மக்கள்,

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றல் வானிலும் நனி சிறந்தனவே"

என்பதிற்கிணங்கவும் எந்த ஊர் போனாலும் எமது சொந்த ஊர் போலாகுமா? என்ற பாடல் வரிகளுக்கேற்பவும், தமது தாய்ச் சங்கத்தினை மறக்காதிருக்க அதன் கிளைச் சங்கமாக ரொறன்ரோவில் கல்வியங்காடு கலாச்சார ஒன்றியத்தை ஸ்தாபித்திருப்பது தாய்ச் சங்கத்தின் நிர்வாகச் சபைக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய தாய் சங்கம் பெருமையடைகின்றது. தங்கள் ஒன்றியத்தின் மூலம் எனது தமிழ் கலை கலாச்சார விழுமியங்கள் மற்றும் சமூகத்தொண்டுகளையும் ஆற்றி வருவதை அறிந்து தாய்ச் சங்கம் பாராட்டுகின்றது. குளிர்கால ஒன்று கூடலின் சார்பாக சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்து அது சிறப்பாக அமைய எமது வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கி நிற்கின்றோம்.

G.T. ஞானசேகரவேல்
தலைவர், ஞானபாஸ்கரோதய சங்கம்
கல்வியங்காடு


Nagu
Auto Collision Centre Inc.
Specialized in Domestic & Import Cars
PPG
State of the art paint shop
with the Spray Baker.
Factory Finish
Bring your car back to life with
a sparkling new paint job
Remove unsightly dents and repair
your craked windshield
Restore your off-lease or accident
vehicle to it's original condition
give your car that showroom look
with our professional detailing service
24 hours
TOWING SERVICE
Before
After
Tel: 416 613-2900
Cell: 416 854-5392
Fax: 416 613-2901
Email:service@naguauto.com
www.naguauto.com
Nagu
740 Warden Ave, Toronto, ON. M1L 4A1

வாழ்த்துச் செய்தி

ஒரு சமூகத்தில் ஒரு பொதுவான அமைப்பு மிக மிக அவசியமாகின்றது. அந்த வகையிலே எம் கல்வியங்காடு கிராமத்தில் அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் முயற்சியால் அமைக்கப் பெற்றதுதான் ஞானபாஸ்கரோதய சங்கம். இச் சங்கத்தின் அனுசரணையால் பல கல்விமான்கள் உருவாகினர்.

எமது நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் எமது கிராம மக்களும் இடம் பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் கனடா நாட்டில் வாழ்கின்ற எமது கிராம மக்கள் நன்றி மறவாது ஞானபாஸ்கரோதய சங்கத்தின் நினைவாக கனடாவில் “கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்” என்ற சேய் அமைப்பினை அமைத்து அதன் மூலம் பல சமூகப்பணிகளை மேற் கொள்வதை அறிந்து கல்வியங்காடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், ஞான பாஸ்கரோதய முன்பள்ளி அதிபர் என்ற வகையிலும் மிகவும் பெருமை அடைகின்றேன். அத்துடன் “குளிர்கால ஒன்று கூடல்” நிகழ்வின் போது தாங்கள் வெளியிடும் மலருக்கு எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றேன்.

நன்றி.

விளையாட்டரங்கு வீதி
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

திருமதி.மா.ரஜனி
தலைவர், கல்வியங்காடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
ஞானபாஸ்கரோதய முன்பள்ளி



உங்கள் அனைத்து வித MOVING தேவைகளுக்கும்
NJ TRANSPORT
Commercial & Industrial Residential moving
NJ
NJ TRANSPORT
Jegan 416-262-1761
You Pack We Move
Tilak 416-278-8407



SkyCake.ca
Wedding
Baby Shower
Birthday
Anniversary
www.skycake.ca
Old Finch & Morningside
Call : 647 - 261 - 0102 (anu)
Wilton Certified Cake Decorator

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய மக்கள் சங்கம் - மொன்றியல் தலைவரின் வாழ்த்துரை!

"சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத் தாழாது உஞற்று பவர்க்கு" என்பது பொய்யா மொழிப் புலவன் வள்ளுவன் வாக்கு. அதாவது தன் குடியை உயர்த்துவதற்காக முயற்ச்சி செய்பவருக்கு அச் செயலைச் செய்து முடிக்கும் திறத்தை அவர் ஆராய வேண்டாமல் அச்செயல் தானாகவே முடிவடையும் இது ஒருவருக்கு மட்டுமல்ல, ஒரு சமூகத்திற்கும் பொருந்தும். இன்று ரொறன்ரோ மாநகரில் கலைவிழாக்காணும் எமது சகோதர சங்கமான கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம், காணவிருக்கின்ற இப்பொங்கல் விழா பெரு வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களாகிவிட்ட போதிலும் இம் முறைதான் இத்தகைய கலைவிழாக்கான எடுத்திருக்கும் முயற்சி வெற்றிபெற்று எதிர்வரும் காலங்களிலும் பல்வேறு சாதனைகளை இச்சங்கம் ஈட்ட வேண்டும் என இதயத்தால் வாழ்த்துகிறேன்.

எமது மண்ணில் எம் சங்கத்திற்கென ஒரு தனித்துவமான வரலாறும், புகழ்மிக்க சாதனைகளும் உண்டு. 1919ம் ஆண்டு எமது கிராம அறிஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் அதன் முதலாவது ஆண்டு விழா பண்டிதர் S. மயில்வாகனம் BSc. London அவர்கள் தலைமையில் 1920ம் ஆண்டு நடைபெற்றது. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கி வந்த ஐந்து முக்கிய சங்கங்களில் இதுவும் ஒன்று. 1948ம் ஆண்டு அரச உதவி பெறும் பொருட்டு "ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றி வந்தது. அக்காலத்தில் வட பகுதியில் மிகப்பிரபல்யம் பெற்ற தினகரன் விழாவைப் போல, எமது சங்கமும் வருடாவருடம் சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகளை நடாத்தி மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றுத் திகழ்ந்தது. வெறுமனே விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாது எமது மண்ணில் மகாவேந்தர்கள் விடுதலைக்காக உயர்வுக்காக உன்னத வாழ்வுக்காக மங்கையர் கழகம், மங்கையர் அபிவிருத்திக் கழகம், விளையாட்டுக்கழகம், விவசாயக் கழகமெனப் பல்வேறு கிளைக்கழகங்களை நிறுவி, பல்வேறு பணிகளைச் செய்து வந்தது. அதுவுமன்றி பெண்களுக்கு தொழில் சார் கல்விகளைப் புகட்டி அவர்களின் வாழ்வை உயர்த்துவதற்காக தையல் பாடசாலை, 3ம் கட்டையடியில் நெசவுநிலையம் என்பன நிறுவி பல்துறைப்பணிகளை எமது சங்கம் ஆற்றி வந்தது.

எமது சங்கத்திற்கு அன்றே கொழும்பு, லண்டன் போன்ற இடங்களில் எல்லாம் கிளைகள் இருந்தது. அந்த வகையில் ஏழு ஆண்டுகளுக்கு முன் மொன்றியலில் எமது சங்கம் "கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய மக்கள் சங்கம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

பல்துறை விற்பனர்கள். அறிவாந்தவர்கள் கூடி ஆரம்பித்த சங்கமே எமது சங்கம். மொன்றியலில் கடந்த 7 ஆண்டுகளாக பல்வேறு பணிகளை ஆற்றிவருகிறது. கனடாவில் இயங்கி வரும் எம் இரு சங்கங்களும் புலம் பெயர்ந்து வாழும் கல்வியங்காடு மக்களும் தாயகத்தில் வாழும் எமது கல்வியங்காடு மக்களும் மற்றும் பலரும் இணைந்து எமது வீரபத்திரர் ஆலயத்திற் கென மிக அழகானதொரு இராஜகோபுரத்தை நிர்மாணித்து வருகிறது. "கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்" என்பார்கள். இக்கூற்றிற்கு இணங்க எம் சங்கங்களின் இம்முயற்சி பெரு வெற்றிபெறும். இத்தார்மீகப்பணியைப் போல இன்னும் பல நற்பணிகளை இவ்விரு சங்கங்களும் இணைந்து நிறைவேற்றவேண்டும் என வேண்டி வாழ்த்துகிறேன்.

தலைவர்
முத்தையா ராஜகோபால்


OUVERT
7
JOURS
MARCHÉ CHOLAN
Loto
* Épicerie * Fruits
* Bière-Vin * Légumes
514-634-4247
Epiceries: Asiatique, Africaine,
Caribeenne, Canadienne
Groceries: Asian, Africain,
Caribbean, Canadian
Biere, Vin, Fruits, Legumes
Beer, Wine, Fruits, Vegetables
905, 14th avenue, Lachine Qc, H8S 4E5
(514)634 - 4247

சிவமயம்

யாழ்ப்பாணம் கல்வியங்காடு

ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்

SRI PATHIRAKAALI SMEATHA SRI VEERAPATHIRAR SWAMI DEVASTHANAM

கல்வியங்காடு – Kalviyankadu யாழ்ப்பாணம் - Jaffna இலங்கை – Sri Lanka.

பதிவு இல. H.A/ S / J.A / 732

07/01/2012

வாழ்த்துச் செய்தி

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் அரவணைப்பில் வாழ்ந்து சான்றோராக இருந்த எம் மக்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் நாடுகடந்து வாழ வேண்டிய நிலையிலும் நமது பிறப்பிடம் மறக்காமல் கனடாவிலும் கல்வியங்காட்டின் ஞானபாஸ்கரோதய சங்கத்தின் பெயரை நிலைநிறுத்தி கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம் என்னும் நாமத்தை முன் நிறுத்தி வாழ்வதையிட்டு மிகவும் பெருமை அடைகிறோம்.

எந்த ஊரேயானாலும் நமது ஊர் தான் சிறந்தாக மனதில் கொண்டு எம் ஊர் மக்கள் 90ம் 95ம் ஆண்டு பகுதியில் காலத்தின் வேதனையால் உணவின்றி தொழில் இன்றி தவித்த காலப்பகுதியில் தங்களின் கனடாவாழ் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய ஒன்றிய தமிழ் மக்கள் நிதி திரட்டி உம் ஊர் மக்களுக்கு உணவு அனுப்பி வைத்த பெருமைக்கு உரியவர்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

தங்கள் சங்கம் சேகரித்த நிதியால் வீரபத்திரர் தேவஸ்தானத்தின் வசந்த மண்டப நிர்மாணம், ஆலய கும்பபிஷேகம் போன்ற முக்கிய வேலைகள் பல முடிவுற்றள்ளன. தற்போதும் இராஜகோபுரம் அமைக்கும் வேலை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. தங்களின் பணி தொடர வேண்டும். தங்கள் உதவியால் ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம் நிமிர்ந்து நிற்கின்றது என்ற பெருமையை கல்வியங்காடு ஞானபாஸ்கரதோய கலாச்சார ஒன்றியத்திற்கு உரியது என்பதை மறுக்கவோ மறக்கவோ முடியாது.

மேலும் தங்கள் பணி தொடரவேண்டுமென்று ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமியை பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் குளிர்கால ஒன்று கூடலின் போது வெளியிடும் சஞ்சிகை சிறப்பாக அமைய எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வாழ்க கல்வியங்காடு ஞானபாஸ்கரதோய கலாச்சார ஒன்றியம் - கனடா
வளர்க உங்கள் பணி"

தலைவர்/ *President* | செயலாளர் /*Secretary* | பொருளாளர்/ *Treasurer*

வாழ்த்துச் செய்தி

வெளிநாட்டுறவுகளின் ஞானபாஸ்கரோதய கனடா வாழ் கலாச்சார ஒன்றியத்தின் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நெஞ்சம் நிறைந்த அன்பையும் மகிழ்ச்சியையும் கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆலயங்களும் சனசமூக நிலையங்களும் மனித சமூகத்தை நெறிப்படுத்தி வளப்படுத்தும் சாதனங்கள் பண்பாட்டை உயர்த்துவதை உன்னத லட்சியமாகக் கொண்டவை. பொதுமக்களும் இதே அடிப்படையில் ஆலயங்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் உதவுவதையும் ஆதரிப்பதையும் அடிநாதமாகக் கொண்டு நடந்தால் எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்பது எல்லோரினதும் நம்பிக்கை.

எமது கிராமத்தின் ஆலயமும் ஞானபாஸ்கரோதய சங்கமும் எம் ஊரவர்கள் ஒவ்வொருவரினதும் இரு விழிகள் இரண்டுமே ஒளிவீசி பட்டொளி பரப்புகின்றன. இதற்கு காரணம் உண்மையான உறுப்பினர்களின் உயர்வான உணர்வு பூர்வமான உழைப்பும் உள்ளூர் வெளியூர் இணைப்பும், அன்பான ஆதரவுகளும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சமயமும் சமூகமும் இரு வேறு துறைகள்தான். ஆனால் இரு துருவங்கள் அல்ல. ஆக்க பூர்வமான பணிகளுக்கு அவை ஒன்றிணைய வேண்டும். சமூக பணிகளுக்கு ஆலயங்கள், ஆலய பணிகளுக்கு சமூக நிலையங்கள் சேர்ந்து செயற்பட்டால் மிக அழகே.

அறிவாகி உலகெல்லாம் நெறியாக்கி அருள் ஈந்து இருள் போக்கி மனதில் நிலையாகி நிற்கும் கல்வி எம் பெருமான் சிலையாகி அருள் வழங்க, நீடுழி வாழ்க!

கனடா வாழ் மக்களின் ஒன்றியத்தின் மலர் வெளியீட்டிற்கு ஆலய பரிபாலன சபை திருப்பணிச்சபை அங்கத்தவர்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வு கொள்கின்றேன்.

கோ.சிவசுந்தரமூர்த்தி
தலைவர்
திருப்பணிச் சபை.

வீரபத்திரர் ஆலயம்
கல்வியங்காடு
யாழ்ப்பாணம்.


416 464 3774





காற்றுவெளி நூலகம்
34,RedRiffe Road,
Plaistow,
London,
E13 0JX.
UK

07-01-2012



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்-கனடா

திசை தோறும் எம் தமிழர் வேரூன்றியபடி எமது வரலாறை பதிவு செய்து வருகின்றனர். எமது கிராமத்தவர் கூட புலம்பெயர்ந்து பல நாடுகளில் தங்களை பதிய வைத்துள்ளதை இன்றைய கல்வியங்காடு மக்கள் ஒன்றிணைந்து செயல் பட்டுவருவதை பாராட்டத் தான் வேண்டும். லண்டனிலும் பலர் வாழ்ந்தாலும் இப்படியொரு அமைப்பை அமைக்கமுடியாது போனது இன்னொரு வருத்தமும் கூட. பல நல்லவற்றை திறம்பட ஒன்றிணைவது அவசியம். அதன் மூலம் அவரவர் கிராமம் முன்னேற உதவவும் முடியும். கல்வியங்காடு மக்களின் பணி பாராட்டத் தக்கது. போரினால் பாதிப்புற்ற கல்வி கற்க வசதியற்ற மாணவர்க்கு தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வதை மனதார வாழ்த்தத்தான் வேண்டும். வருடாந்த ஒன்றுகூடல் மூலம் இன்னும் பல தங்கள் சேவைகளை விஸ்தரிக்க முடியும். இளைய தலைமுறையினரின் கலை கலாச்சார பண்பாட்டியல்புகளையும் வளர்க்க உதவமுடியும். அப்போது தான் நமது தேசம் பற்றிய சிந்தனையையும் அவர்களாகவே சிந்தித்து செயலாற்ற முடியும்.

ஊர் ஞாபகம் கரை தட்டுகிறது.
மண்ணின் வாசம் சுவாசமாய்...
எங்கள் ஊர் கோவில்...
எங்கள் மைதானம்..
எங்கள் தெருக்கள்..
எங்கள் நண்பர்கள்..
எங்கள் விழாக்கள்..
எங்கள் விடுதலைப் போராட்டம்...
மனதில் ஊரும் ஏதோ உணர்வு கீறும்.

நினைவுகளை மீண்டும் மீட்டும் கனவுகளை நினைத்துப் பார்க்கவைத்த கனடா கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியத்தார்க்கும், நண்பர் ஜெயக்குமாருக்கும் அவருடன் உழைக்கும் சக தோழர்களுக்கும் வாழ்த்துக்களும்.. வணக்கங்களும்...

புத்தாண்டில் புதியன புனைவோம்

இவண்,
முல்லைஅமுதன்
இ.மகேந்திரன்

வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!





FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES · SPINAL CORD INJURY · BRAIN OR HEAD INJURY · SCARRING OR DISFIGUREMENT · INTERNAL INJURIES OR DEATH



Jack J. Fireman Q.C. LLM.
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



Harry F. Steinmetz
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S per week

If the impairment catastrophic your claim can be:

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expenses up to **$1,000,000.00**

OVER 50 YEARS COMBINED EXPERIENCE

even if you are:

unemployed - employed - passenger - pedestrian - cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

MOTOR VEHICLE ACCIDENT

தீபன்

(416) 505 - 9804
(416) 624 - 4751
24 Hours

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்.

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA

VANNI TAMIL COMMUNITY AND CULTURAL CENTRE- CANADA.
Non profitable Organization – Reg. # 1333183.
2466 Eglinton Av East Ste# 402, Scarborogh (Ont), M1K 5J8, Canada.

வன்னித்தமிழ்க்கலாச்சார அமையத்தின் புலமைப்பரிசில் குழுவின் இணைப்பாளர் திரு. எஸ் கே. யோகநாதன் அவர்களின் சிறப்புச் செய்தி.

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பென்றும் நாடாச்சிறப்பு."

அன்பானது பிறருக்கு உதவி செய்யும் ஆர்வத்தைத் தோற்றுவிக்கும். அப்படி உதவுதல் "நட்பு" என்றும் நாடுதற்குரிய சிறப்பையும் தேடித்தரும்.

எனும் திருவள்ளுவரின் கூற்றுக்கு அமைய கனடா கல்வியங்காடு ஞா. பா. கலாச்சார ஒன்றியம் தனது 5ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் அவ் ஒன்றியத்தின் அன்புள்ளங்கள் இணைந்து சகோதரர் திரு. சின்னத்தம்பி பரஞ்சோதி அவர்கள் ஊடாக தாயகத்தின் வடக்கு கிழக்கில் போரினால் அநாதையாக்கப்பட்ட மக்களுக்காக எம்முடன் இணைந்து உதவி அளித்து வருகின்றவர்களை இம் மகத்தான சேவையை வன்னித்தமிழ்க் கலாச்சார அமையத்தின் சார்பிலும் மனித நேயத்தின் அடிப்படையிலும் மனதார பாராட்ட விரும்புகின்றேன். இம்மகத்தான பணி, காலம் அறிந்து செய்த விடயமாகும்.

இவ் விடயத்தினை நாம் வடக்கில் திரு. எம். ஐ. குருஷ் அவர்கள் ஊடாகவும், கிழக்கில் திரு. த. தயாபரன் அவர்கள் ஊடாகவும் இணைப்பாளர்களாகக் கொண்டு முறையாக விசாரிக்கப்பட்டு சரியானவர்களைத் தெரிவுசெய்து அதிபர் மற்றும் குழுக்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் அவரால், அவர்களின் வங்கி கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்படுகின்றது. இவ்வைப்புச் சீட்டு எமக்கு அனுப்பப்பட்டு அதனை உரியவர்களுக்கு சேர்ப்பித்து வருகின்றேன். உதவி பெறும் மாணவன் பெயர், தொ.பேசி இலக்கம், பாடசாலை என்பனவும் உதவி செய்பவர்களுக்கு வழங்கப்பட்டு எந்நேரமும் அவர்களுடனும் எம்முடனும் இணைப்பாளர்களுடனும் தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகள் செய்து கொடுத்துள்ளோம். இங்கு எல்லா விதமான நிர்வாகச் செலவுகளுக்கும் இல்லாமல் முழுமையாக சேவை அடிப்படையில் தங்கள் ஒன்றியம் எமது தேசத்தின் எடுத்துக் காட்டாக ஒன்றியமாக திகழ்வதை மீண்டும் வாழ்த்தி மேன்மேலும் பல வழிகளில் தொண்டாற்ற இறைவனின் ஆசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

வளர்க தங்கள் பணி.

அன்புடன்
திரு. எஸ் கே. யோகநாதன்
வன்னித்தமிழ்க்கலாச்சார அமையத்தின் புலமைப்பரிசில் குழவின் இணைப்பாளர்



ஓம் சக்தி

ஓம் சக்தி மன்றம் - கனடா
27 Casebridge Crt, Uni -2
Scarbortough, ON.
M1B 4Y4

வாழ்த்துச் செய்தி

கல்வி, செல்வம், பண்பாடு மூலம் சிறப்புப் பெற்ற கல்வியம்பதிக்கு, கல்வியங்காடு வீரபத்திரர் கோவில், கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கம் என்பன பெருமை சேர்ப்பன அத்தகைய சிறப்புப் பெற்ற இந்த ஞான பாஸ்கரதோதாய சங்க கலாச்சார ஒன்றியத்தின் 5வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இந்த ஒன்றியத்தின் தலைவர் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து செயல்பட்டு பல்வேறு பணிகளை செம்மையாக நிறைவேற்றியிருப்பது பாராட்டத் தகுந்தது. இந்த நல்ல வேளையில் வெளி வரவிருக்கும் சிறப்பு மலர் பல நல்ல செய்திகளைக் கொண்டு இவ் விழாவுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று விரும்பி அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சுபம்
ஓம் சக்தி

இங்ஙனம்
கந்தையா சங்கரபாலன்
போஷகர்
ஓம் சக்தி மன்றம் - கனடா


Specializing In All Gas Heating & Air Conditioning
For New Homes and Commercial Contruction
RAMAN
APPLIANCES INC.
- General Contractors
- Sales
- Services
- Installations
CENTRAL A/C
HUMIDIFIERS
AIR CLEANERS
CENTRAL VACUMMS
GAS FIRE PLACES
ALARM SYSTEMS
BOILERS
GAS FURNACES
Carrier
turn to the experts
158 KENNEDY RD SOUTH
UNIT # 11, BRAMPTON
ON. L6W 3G7
TEL: 905 459-0902
6055 STEELES AVE EAST
UNIT # C105, SCARBOROUGH
ON. M1X 0A7
TEL: 416 332-1989
RAMAN CHELLIAH
SALES MANAGER
PLEASE CALL FOR A FREE
IN-HOME PRODUCT CONSULTATION
Paradise Print
WE DEAL IN ALL MAKES AND MODELS: SERVICES AND REPAIRS

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கம் வரலாறு சுருக்கம்



மேற்படிசங்க வரலாற்றை நினைவு கூற சந்தர்ப்பம் தந்ததையிட்டு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றிய நிர்வாக அங்கத்தவர்களுக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன் .

இச்சங்கம் 1919ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது அக்கால கட்டத்தில் கிராமங்களில் சங்கங்கள், வாசிகசாலைகள் குறைவாகவே இருந்தன. இந்தச் சூழ்நிலையில் கல்வியங்காட்டில் படித்த சில பெரியவர்கள் எமது கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக ஒரு சங்க அமைப்பு தேவை என்று உணர்ந்து, ஒரு நிர்வாகத்தை அமைத்து பின்னர் வாசிகசாலை வேண்டும் என்று முடிவெடுத்து செயல்பட ஆரம்பித்தனர். அக்காலத்தில் கட்டிட இடவசதி இன்மையால் அக்கிராமத்தில் உள்ள நன்கொடையாளர்களின் உதவியினால் ஓலையால் வேயப் பட்ட வாசிகசாலையும் இளைப்பாறும் இடமுமாக ஞான பாஸ்கரோதய சங்கமும் உருவாகியது.

இதனை ஊர்மக்கள் செல்லமாக “இளைப்பாறும் நிலையம்” என்றும் அழைப்பதுண்டு. தொடர்ந்தும் ஊர்மக்களினது அயராத உழைப்பினாலும் நன்கொடைகளாலும் ஒற்றுமையினாலும் மேற்படி சங்க கட்டிடம் நான்கு முறை புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்றைய ஞானபாஸ்கரோதய சங்க கட்டிடம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

இச்சங்கம் ஊர்மக்களினதும் பிள்ளைகளினதும் முத்தமிழாகிய இயல், இசை, நாடக வளர்ச்சிக்காகவும், உடல் ஆரோக்கியத்துக்கான விளையாட்டுப் போட்டிகளையும் ஆண்டு தோறும் இடைவிடாது நடத்தி வந்ததுடன் அயற்கிராமங்களுடனும் போட்டிகளை நடத்திவந்தது. அத்துடன் நின்று விடாது வலிகாமம் கிழக்கு பிரிவினால் நடத்தப்பட்ட பல போட்டிகளிலும் சங்க அங்கத்தவர்களை பங்கு கொள்ளவைத்து வெற்றிவாகை சூடிய பெருமையும் கொண்டது.

எமது சங்கம் ஒவ்வொரு ஆண்டும் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது மட்டுமன்றி, வடமாகாணத்திலே “தினகரன்” பத்திரிக்கை நிர்வாகத்தினர் நடத்திய சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு அடுத்தபடியாக முதன்முதலில் சைக்கிள் ஓட்டப்போட்டிகளை நடத்திய பெருமையும் எமது ஞானபாஸ்கரோதய சங்கத்துக்கே உரித்தானது.

இதனைவிட ஆண்டு முழுவதும் கால்பந்து, துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், கிளித்தட்டு போன்ற சகல விளையாட்டுக்களிலும் எமது சங்கஉறுப்பினர்கள் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் கலந்து கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில் நடைபெற்ற விளையாட்டுக்களும், விளையாட்டுப் போட்டிகளும் பின்னர் கல்வியங்காட்டில் சின்னச்செம்பாடு, ஒற்றைப்பனை விளையாட்டு மைதானம் என அனைவராலும் அழைக்கப்படும் தனியார் காணிகளில் நடைபெற்றது. அதன் பின் எமது நிர்வாக சபையில் இருந்த சில பெரியவர்களின் அயராத உழைப்பினாலும், முயற்சியினாலும் தற்போதைய ஞா.பா.ச.விளையாட்டு மைதானம் அரசாங்கத்திலிருந்து அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர மைதானமாக எமது சங்கத்துக்காக பெறப்பட்டு இன்று சகல விளையாட்டுக்களும் அங்கு நடைபெறுவது மிக்க மனமகிழ்வை தருகிறது.


ஞானபாஸ்கரோதய சங்கங்கத்தின் கிளைகள் சில காலங்களில் கொழும்பிலும், இங்கிலாந்திலும் இயங்கியது. அக்காலகட்டங்களில் கொழும்பில் “ஞானபாஸ்கரன்” என்ற பத்திரிகையும் அக்கிளைச்சங்கத்தால் வெளியிடப்பட்டன. கொழும்பு கிளையில் இருந்து எமது மைதானம் திருத்துவதற்காகவும் வேறு சில சந்தர்ப்பங்களிலும் பணஉதவி எமது தலைமைச் சங்கத்திற்கு கிடைக்கப் பெற்றது.

எமது வாசிகசாலையில் அன்று தொட்டு இன்றுவரை சகல தினசரிபத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். சில காலங்களில் புத்தகங்கள் கூட சங்கத்தவர்களுக்கு இரவல் கொடுத்து பெறப்பட்டது. இவையாவும் ஊர்மக்களின் மனமுவந்த உதவிகளாலும் சில நலன்விரும்பிகளின் நன்கொடைகளாலுமே செயற்படுத்தக்கூடியதாக இருந்தது. இதுபோக வருடம் தோறும் தைப்பொங்கல், சரஸ்வதிபூசை, சமயகுரவர்மார்கள் பூஜைகள் யாவும் திறம்பட நடாத்தப்பட்டு வருகின்றது.

மேலும் 25ம் ஆண்டு நிறைவு வெள்ளிவிழா கொண்டாடும் காலகட்டங்களில் சங்க அங்கத்தவர்கள் என்னை செயலாளராக தெரிவுசெய்ததால் அப்பாரிய பொறுப்பில் இருந்து எமது சங்க வளர்ச்சிக்கு திறம்பட உழைத்ததையிட்டு இன்றும் நான் பெருமையடைகிறேன். அந்த காலங்களில் அரிக்கன்லாம்புவின் ஒளியில் நிர்வாகசபைக் கூட்டங்களும் பெற்றோல் மாக்ஸ் விளக்கின் ஒளியில் ஆண்டு விழாக்கூட்டங்களும் சைவ மகாவித்தியாசாலையில் நடத்தியது இன்றும் என் மனக்கண் முன் நிற்கிறது. பின் எமது சொந்த வாசிகசாலை கட்டடத்தில் மின்சாரவசதியில்லாத காலத்தில் லைட்மெசின் வாடகைக்கு அமர்த்தி ஆண்டு விழாக்கள் கொண்டாடியது ஞாபகத்திற்கு வருகிறது.

"எழுமின் விழுமின் எண்ணிய கருமம் கைகூடும் வரை உழைமின்" என்னும் அறிவுரைக்கமைய கல்வியங்காடு ஊர்மக்கள் ஒவ்வொருவரினதும், மண்ணின் மறவாத தன்மையும், ஊர்உணர்ச்சிகளும், வாரிவழங்கும் நற்குணங்களும், ஒற்றுமையும் உள்ளவரை, எமது சங்கமும், எமது ஊரும் மேன்மேலும் பிரகாசித்து ஓங்கி வளர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது ஆத்ம சுத்தியுடன் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கந்தையா அன்னலிங்கம்








VIGNA VIDEO PRODUCTIONS
Since 1991
Your day to Remember
for a Video you'll never forget . . .
Tel: 416 335 3749
Cell: 416 417 1949
Fax: 416 335 5058
www.vignavideo.com
vignavideo@hotmail.com

"கள்ளி" எனும் மூலிகைக் காடு "இன்று கல்வியங்காடு"

தம்பையா சம்பந்தர்
போஷகர்,
ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம் - கனடா



- கால் வைத்தியம்
- கர்ப்பிணி வைத்தியம்
- கால் கை முறிவு தறிவு வைத்தியம்
- குழந்தைகளின் நோய்களுக்கான வைத்தியம்
- விஷ கடி வைத்தியம்
- சித்த வைத்தியம்

போன்ற பாரம்பரிய வைத்தியங்களின் ஆரம்பம் எங்கே? பண்டைய காலம் தொட்டு யாழ் குடாநாட்டில் இன்றும் சிறப்பாக நடப்பது எங்கே? என்ற ஒரு கேள்விக்கு மன்னர் காலத்திலிருந்து இன்று வரை பலராலும் குறிப்பிடும் ஒரே பதில்! "கல்வியங்காடு" அல்லது அதனைச் சுற்றியுள்ள "நாயன்மார்காடு", நல்லூர் போன்ற ஊர்கள் என்றால் அதுவே ஈழத்தமிழர்கள் வரலாற்றில் குறிப்பிடும் உண்மையாகும். மேலைத் தேச வைத்தியங்கள், சிகிச்சைகள் என்றால் என்ன? என்பதில் எதுவும் அறிந்திராத அந்தக் காலத்தில் பாரம்பரிய சித்த வைத்தியங்களில் வழங்கும் மருந்துகளை தயாரிக்கும் அடிப்படை மூலிகைகளை இயற்கையாக வளர்த்தும், மூலிகைத் தோட்டமாக உருவாக்கிக் கொடுக்கும் ஒரு மண்ணாகவே எங்கள் ஊர் கல்வியங்காடு விளங்கியது என புராதன ஏடுகளில் குறிப்பிடப்படுகின்றது

"கள்ளி" என்பது ஒரு வகைச் செடி. அது ஒரு வகை மூலிகை. (தாவரவியல் பாடங்களில் "CACTUS", "EUPHORBIA" எனும் ஆங்கிலப் பெயர்களில் தற்போது குறிப்பிடப்படுகின்றது.)

இந்த "கள்ளி" என்னும் மூலிகைச் செடியில் நாற்பது வகைகள் உள்ளது என தாவரவியல் வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். இம் மூலிகைச் செடிகள் தன்னிச்சையாக கலட்டியிலும், செய்பயிராக செம்பாட்டு மண்ணிலும் உருவாகும் தன்மை கொண்டவையாகும்.

மருந்துகளுக்கு அரிதாகப் பயன்படும் இக் "கள்ளி" எனும் செடி வகை மூலிகைகள் யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே அவர்களின் ஆதரவுடன் எங்கள் ஊர் மண்ணில் பல வகையாக உருவாக்கி வளர்த்து எடுக்கப்பட்டது எனவும், அதன் காரணமாகவே நமது மண் "கள்ளியங்காடு" என்னும் பெயரில் அழைக்கப் பட்டு வந்தது என இலங்கையின் வரலாற்று ஏடுகளில் குறிப்பிடப்படுகின்றது.

"கள்ளியங்காடு" என்னும் எங்கள் மூலிகைக் காட்டில் படிப்படியாக மக்கள் குடியேற்றம், மூலிகை நிலங்கள் உணவு தானியங்கள் விளையும் நிலமாக மாற்றப்பட்டு அங்குள்ள மக்களின் கல்வி வளர்ச்சிகளின் பரிணாம வளர்ச்சியின் ஒரு படியாக இறுதி காலங்களில் "கல்வியங்காடு" என்னும் பெயரில் இலங்கை அரசின் கிராமோதய பதிவேடுகளில் சட்ட ரீதியாக ஒரு ஊரின் பதிவாக உருவாகியது. யாழ் நகரிலிருந்து சுமார் மூன்று மைல்களுக்கு அப்பால் வயல் நிலம், பலவகை பயிர்களின் விளைநிலம், இருவாட்டி நிலம், கலட்டி நிலம் என பலதரப்பட்ட தரை அமைப்புக்களைக் கொண்ட, நம் பிறந்த பூமியின் வடக்கு எல்லையாக இருபாலையும், மேற்கு எல்லையாக திருநெல்வேலி, கிழக்கு எல்லையாக கட்டைப்பராய், தென் மேற்கு எல்லையாக நல்லூரும் அமைந்துள்ளது.

சைவப் பேரொளியினை மக்களிடையே பாய்ச்சி ஆத்மீக ஒளிபரப்பும் இந்து ஆலயம், பன்மொழி அறிஞர் வண.பிதா ஞானப்பிரகாசரால் ஆரம்பிக்கப்பட்ட தேவாலயம், அறிவுப் பசி தீர்க்கும் வாசிகசாலைகள், உடல் உரத்தினை வளர்க்கும் விளையாட்டுக் கழகம், பலவகை சமூகப் பணி புரியும் பல்வேறு நிறுவனங்கள் என எம்மூர், மக்களை அன்று தொட்டு இன்று வரை வழி நடத்துகின்றது. "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற ஔவைப்பாட்டியின் பொன் மொழிக்கிணங்க தாயக மண்ணிலிருந்து மேலைத் தேச நாடுகளுக்கு படையெடுத்து சென்றவர்கள் வரிசையில் நம் தமிழ் இளைஞர்களில் முதன்மையானவர்கள் பலர் நம்மூர் இளைஞர்கள் என்பதும் பலரும் அறிந்து கொண்ட விடயமாகும்.

இந்த வழியில் கல்வியங்காடு மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் மண்ணின் மைந்தர்களின் கண்ணில் நின்று நிழலாடும் தாயக மண்ணின் இரு பொது நிறுவனங்கள். அவற்றில் ஒன்று,

(1) தாயக மண்ணில் வசிப்பவர்கள் உட்பட உலகம் வாழ் கல்வியங்காடு மக்கள் அனைவரையும் திருவருளின் பாதையில் வழி நடத்தும் வீரபத்திரர் ஆலயம்

யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த தமிழ் மன்னர் காலங்களில் இருந்தே இம்மூலிகைக் காட்டில் தோன்றியது எப்படி என தெரியாது தாமாக தோன்றிய ஆலயம் இதுவாகும். கல்வியங்காடு வாழ் சகல மக்களுக்கும் நின்றருள் செய்யும் தெய்வம் எழுந்தருளியஆலயம் இதுவென்றால் அது மறுக்க முடியாத உண்மையாகும் .

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வெளிநாடுகளுக்குச் செல்லும் நம்மூர் இளைஞர்கள், அவர்களைப் பிரிந்து முதன்முதலாக அனுப்பி வைக்கும் பெற்றோர் எம்மூர் வீரபத்திரர் கோயிலில் நேர்த்தி வைத்து, பிரார்த்தனை செய்து சென்றடையும் நாட்டில் சகல சௌபாக்கியங்களும் பெற்று தங்கள் குடும்ப சுமை தீர வேண்டுமென வேண்டுதல் செய்யும் புனித தலமே வீரபத்திரர் ஆலயமாகும்.

(2) கிராமத்தின் சகல பொதுப்பணிகளுக்கும் ஒரு தலைமையகமாக இருக்கும் “ கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா சங்கம்”

இதே பெயரில் எம்மண்ணில் உருவாகிய இப்பொது நிறுவனம் இன்று, நேற்று உருவாகிய ஒன்றல்ல. இதற்கு ஒரு வரலாற்றுப் பெருமை உண்டு. அதாவது, 1919ஆம் ஆண்டு இலங்கையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் ஆட்சி செய்த காலத்தில் உருவாக்கப்பட்ட சங்கம் ஆகும். இன்றும் தளராமல் தொடாந்து அடுத்தடுத்த சந்ததியினால் வீறு நடை போட்டு பல வழிகளிலும் விரிவடைந்து பல்வேறு சேவைகளை தாயக மண்ணில் ஆற்றி வருகின்றது.

1944ஆம் ஆண்டு நம்மூரவர்களின் இச்சங்கம் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாவினை சிறப்பாகக் கொண்டாடியது. தொடர்ந்து வருடம் தோறும் ஏராளமான விழாக்கள் கொண்டாட்ட -ங்களைச் சந்தித்து கடந்து வந்து இன்னும் சில வருடங்களில் தொடரும் நூற்றாண்டு விழாவினை எதிர் கொள்ள அண்மித்து நிற்கின்றது. நூற்றாண்டு விழா காணும் பொது நிறுவனம் என்பது ஈழமண்ணின் கிராமங்களில் அரிதாக நடக்கும் நிகழ்வுகளில் ஒன்றாகும்.

அந்த வகையில் எங்கள் பொதுப் பணிகள் யாவற்றுக்கும் தலைமையகமாம் “ கல்வியங்காடு - ஞான பாஸ்கரோதய சங்கம்” ஓர் உயர்ந்த நிலையில் நிற்கின்றது.

“ஞான பாஸ்கரோதய” என்னும் பெயரில்,

- சனசமூக நிலையம்
- மங்கையர் கழகம்
- கிராம அபிவிருத்திச் சங்கம்
- விளையாட்டுக் கழகம்
- விவசாயிகள் சங்கம்


என பல முனைகளிலிருந்து மக்கள் மத்தியில் தாயக மண்ணில் தொடர்ந்து இயங்கிக் கொண்டே யுள்ளது.

தாயக மண்ணில் நூறு ஆண்டு கால எல்லையினை நோக்கி வீறுநடை போடும் தலைமைச் சங்கத்திற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் கை கொடுக்கும் கரங்களில் ஒன்று மொன்றியலிலிருந்து இயங்கும் “ கல்வியங்காடு மக்கள் சங்கம்”. இதனுடன் சேர்ந்த மறு கரமாக ரொரன்ரோவிலிருந்து இயங்கும் “ஞான பாஸ்கரோதயா கலாச்சார ஒன்றியம்” ஆகிய இரண்டும் கனடா வாழ் கல்வியங்காடு மக்களை ஒன்று திரட்டி இரு அணிகளாக ஒழுங்குபடுத்தி இன்று (ஜனவரி 07-2012) “ஞான பாஸ்கரோதயா கலாச்சார ஒன்றயம்” முதன்முதலாக கொண்டாடும் கலைவிழாவில் தாயக மண்ணின் நினைவுகளை மீட்டு, அந்த மண்ணின் உயர்வுகளுக்கு பலதரப்பட்ட வழிகளிலும் கைகொடுத்து வழிகாட்டுவோம்.



To Sell or Buy
I can assist in getting all the sources....
அழகான இல்லம் அமைந்திட
அன்பான சேவை
- Marketing
- Open house
- home staging
- mortgage
- inspection
- find movers
- Real estate lawyers
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Miracle
Realty Ltd. Brokerage
Tel: 416 747-9777
Dharsan Manooharan
Sales Representative
Direct: 416 779-8786
dharsan.m@gmail.com
5010 Steeles Ave W.,
Suite 11A
Rexdale, ON.
M9V 5C6
Fax: 416 747-7135
To Buy or Sell in Brampton, Mississauga, Scarborough, Markham Etc.
My priority your satisfaction:
Your happiness my reward


DÉPANNEUR
BONI SUBA
Bière et Vin, Cigarettes, Timbres, Pains, Lait,
Carte d'appel, Créme Glace, Sandwiches, Café etc...
LIVRAISON GRATUITE
(514) 956-7639
12258 Boul Lachapelle,
Montréal, Qc, H4J 2M7.
Canada


யாழ்ரன்
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களின்
சில்லறை மொத்த விற்பனையாளர்கள்
Suriya
சமையலுக்குத் தேவையான சகல பொருட்களுடன்
சூரியா பிராண்ட் தயாரிப்புக்கள்
அனைத்தையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்
2104 BRIDLE TOWNE CIRCLE
(Warden & Finch சந்திப்பில்)
416 - 494 - 9494



செம்மண்ணும் வெண்மணலும்
சங்கமம் செய்து
தங்கமென வளங் கொழிக்கும்
தெங்கும் தேமதுரப் பலாவும்
மாங்கனியும் வாழையும்
நிரையமைத்த கமுகும்
அழகு செய்யும் பூஞ்செடியும்
அணிசெய்ய நெருக்கமாய்
உறவுகள் எல்லாம்
ஒன்றாய்க் கூடி
குடிதனைப் பெருக்கி வாழும்
கல்வியங் காடெனும்
பதியுறை மக்கள்
தேசம்விட்டு(ச்)
சேன்றபோதும்
தமிழ்மேல்க் கொண்ட
நேசம் விட்டுப் போகாமல்
எடுக்கின்ற நல்விழவு.
குளிர்ச்சி தருகின்ற
தேசத்தில் இருள்கௌவும்
பொழுதொன்றில் மின்சார
ஒளி வெள்ளம் பாய
உள்ளங்கள் எல்லாம்
உவகையில் மகிழ
உழைத்துக் களைத்த
களைப்பு மறந்து
பெண்டிர் பிள்ளைகள்
சுற்றஞ் சூழல்
தருகின்ற சுமைகள்
அனைத்தும் துறந்து
ஒன்று கூடி இனிமையாய்
பாட்டுக்கள் பாடி
நடனம் ஆடி
அறுசுவை தருகின்ற
அமிர்தமாம் உணவுண்டு
இந்நாளை எந்நாளும்
மறவா நாளாக்க
அழகாக அச்சிட்டு
வெளியிடும் நூற்பணி
இனியும் இனியும்
தொடர வேண்டும்.
தொட்டணைந்தூறும்
தமிழ்க்கனி மேலும்
சென்ற இடமெல்லாம்
சிறக்க வேண்டும்.
மெல்லத் தமிழினிச்
சாகுமென்ற பாரதி
வந்து பிறந்து
நாண வேண்டும்.
இலக்கியத் தென்றல்
தருகின்ற நறுமணம்
சர்வதேசமும் பரவிட
இதுபோல் பல பணி
நூல்பல செய்து,
விழவுகள் எடுத்துக்
கொண்டாட வாழ்த்துகின்றோம்



<u>இங்ஙனம்</u>
மண்ணையும் மக்களையும் நேசிக்கும்
கல்வியூர் கு.புஸ்பன் குடும்பம்.


416 332-8560
Any Style, Any Size,
World Custom Framing.
416 332-8560
World
Custom Framing
Custom Frames
Ready Mades
Photo Frames
Photo Mounts
Framed Mirrors
WHOLESALE FRAMES
FRAMING
Top Quality Frames. Best Prices. Satisfaction Assured.
416 332-8560
585 Middlefield Rd. Unit# 5, Scarborough, ON. (Finch & Middlefield) M1V 4Y5
www.worldcustomframing.com
World Custom Framing.
Vijay: 416 332-8560


3 Locations to Serve with 100% Vegetables
Datta Food Manufactory INC.
F D M for Quality
Datta Food
Take Out Hot Line: 416 278-8073
Scarborough Location
Datta Food M.F.
585 Middlefield Rd, # 5 & 6
Scarborough, ON.
Tel: 416 297-8440
Markham Location
Datta Food M.F.
20 Anderson Ave
Markham, ON
Tel: 905 294-4444
Brampton
Datta Food M.F.
85 Kennedy Rd South, # 31
Brampton, ON.
Tel: 905 460-0926

மண் வாசனை




தாய் மண்ணிலே
தனித்துவமாம் அமைந்த
எங்கள் G.P.S
இடர் பல வரினும்
தடைகள் அகற்றி
சாதனை புரிந்த எங்கள் - G.P.S
நீ வாழ்க பல்லாண்டு
ஊர் விட்டு வந்தோம்
உந்தன் பாசம் மட்டும்
எங்கள் நெஞ்சினில் - சுமந்து வந்தோம்
ஆடி மாதத்தில் ஆடல் பாடினோம் - அன்று
இன்று உன் நினைவால்
உனக்கு பொங்கல் விழா - எடுத்து
பெருமிதம் அடைகிறோம் - இன்று
இத்தனைக்கும் யார் காரணம்

நீ தானே
உன் தயவால் உன் ஊரில்
பிறந்து வளர்ந்த
அனைத்து அன்பு உள்ளங்களும்
உனக்காக ஒற்றுமையாய்
கரம் கொடுத்ததினால் - இன்று
உன் பெயர் புலம் பெயர் மண்ணில்
ஓங்கி ஒலிக்குது


வீரபத்திரர் துணையுடன்
தொடர்ந்தும் உனக்கு - எடுப்போம்
பொங்கல் விழா
உன்னை சிறப்பிக்க - கரம் தந்த
அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எங்களது நன்றிகள்

சி.மதி


YARL FANCY
BANQUET & PARTY SERVICE
4455 SHEPPARD AVE. EAST, UNIT 7, SCARBOROUGH, ON.
COMPLETE
PAKAGES
AVAILABLE
FREE-LIMO /
ENTERTAINERS
HONEYMOON SUIT
திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா
மற்றும் மங்கள வைபவங்களை உங்கள்
விருப்பம் போல் ஒரே கூரையின் கீழ்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அனைத்தையும் செய்து மகிழ்ந்திட யாழ்பான்சி
YARL FANCY BANQUET &
Party Services Momiji Centre
3555 Kingston Rd @ Markham Rd
Tel: 416 419-5990 / 905 472-9033
Fax: 905 472-2457
Paradise Print (416) 288-6449



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியத்தி கல்வி ஊக்குவிப்பு



	உதவினர் பெயர்	பாதிக்கப்பட்டவர் பெயர், பிறந்த திகதி	பாடசாலை பெயர்	இழப்பினர் தன்மை
1	நடராஜா தங்கேஸ்வரி	G.றோகினி 22.11.1999	தட்சணமடு ம.வித்தியாலயம்	தந்தை மரணம்
2	தம்பையா சம்பந்தர்	J.ஜசி 23.04.2003	தட்சணமடு ம.வித்தியாலயம்	தந்தை மரணம்
3	நித்தியானந்தன் கிரிதரன்	ப.யூடா 08.01.1999	தட்சணமடு ம.வித்தியாலயம்	தந்தை மரணம்
4	சின்னத்தம்பி பரஞ்சோதி	ச.அனுசா 25.04.2001	மட்டக்களப்பு கொக்குவில் வீதி	வறுமை
5	சுந்தரலிங்கம் ஜெயந்தன்	L.நிலவன் 11.11.2001	மட்டக்களப்பு கொக்குவில் வீதி	தந்தை கண்பார்வையில்லை
6	நடராஜா ஜெயக்குமார்	N.செல்வகுமார் 07.01.1991	தட்சணமடு ம.வித்தியாலயம்	தந்தை மரணம்
7	நடராஜா ஜெகன்	செல்வி.T.சிலுவைதாசன்	வங்காலை	வறுமை
8	பசுபதி பத்மநாதன்	M.ஜெசிந்தன் 13.06.2001	மட்டக்களப்பு	தாய் மரணம்
9	நடராசா புவனேந்திரன்	சி.யோன்சன் 15.07.1997	பெரியமடு ம.வித்தியாலயம்	தந்தை மரணம்
10	சிதம்பரப்பிள்ளை ராசன்	க.மதுமிதா 23.06.2001	மட்டக்களப்பு மகிழந்தீவு சரஸ்வதி வித்.	தந்தை சிறையில்
11	நாகராசா மனோகரன்	அ.கஜேந்தினி 05.07.2005	மடு வித்தியாலயம்	தாய், மூன்று பிள்ளைகள்
12	சுப்பையா கணேஸ்	த.விதுசன் 05.08.2000	பெரிய மன்னார் ம.வித்தி.	தாய் மரணம்
13	சுப்பையா கணேஸ்	ப.குவிதா 21.04.1997	பெரிய மன்னார் ம.வித்தி.	தந்தை மரணம்
14	சுப்பையா கணேஸ்	ச.சத்தியமரன் 21.04.2001	பெரிய மன்னார் ம.வித்தி.	தாய் மரணம்
15	சுப்பையா கணேஸ்	க.கலைச்செல்வன் 26.03.2001	பெரிய மன்னார் ம.வித்தி.	தாய் மரணம்
16	சுப்பையா கணேஸ்	சி.விதுசன் ----------	பெரிய மன்னார் ம.வித்தி.	தந்தை மரணம்
17	பரஞ்சோதி யுதர்சன்	இ.தேவனா 18.07.1990	பேராதனைப் பல்கலைக்கழகம்	சகோதரி ஊனம், பெற்றோர் வறுமை
18	குமரேசு புஸ்பராசா	கமலேசன் 11.05.1995	அ.த. பாடசாலை, கிளிநொச்சி	தாய் புற்றுநோய், மனநோயாளி
19	சிவப்பிரகாசம் மதிவர்ணன்	ம.சினேகா 26.10.2003	ஐயக்கேணி த.க.பா., செங்கலடி	தந்தை ஊனம் (இருகால்களும் இல்லை)
20	வேலாயுதபிள்ளை சுரேஸ்குமார்	ம.சிவலோசினி 19.12.1996	திருவையாறு, கிளிநொச்சி	தந்தை மரணம்
21	சிதம்பரபிள்ளை மூர்த்தி	கா.கலைப்பிரியன் 01-05-2006	கிளிநொச்சி	தந்தை மரணம்
22	ப. யுதர்சன்	கோழிவளர்ப்பு-பசுமாடு வளர்ப்பு	மட்டக்களப்பு - தட்சணமாடு	சுயதொழில் உதவி

மேலும் இத்தொகை அதிகரிப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடிநிற்கிறேம்

நன்றி


NAGU HOME RENOVATION
Home Renovation
Whatever Your Remodeling Needs...
Home Interior Designs | Living Room Designs | Modern Bathroom Designs
Modern Bedroom Designs | Modern Home Designs | Modern Kitchen Designs
Modern Lighting Fixtures | Modern Office Designs
Modern Office Furniture | Office Design Ideas
Steel Welding Services
Main Gate | Slider gates | Security Grills
Window Grill | Balcony Grills | Garden Gete
WE HAD FOR A LONG TIME GIVEN THE CUSTOMER THE CHOICE OF HAVINGTHE GATES BUILT FROM EITHER STEEL OR ALUMINUM, BUT AS TIME HAS PROGRESSED WE NO LONGER FEEL THAT WE CAN OFFER STEEL AS AN OPTION.
SASI (647) 926-1287
AJITH (647) 975-2746

விடியலுக்காக ஏங்கும் உள்ளம்

கல்வியூர் மண்ணே உன்னை மறப்போமா?
காலம் காலமாய் உன்னில் நாம் கண்ட உணர்வை மறப்போமா
நாள் தோறும் வாசம் வீசும் உன் பண்பாட்டில்
தவறாக பூவும் கூட பூக்காது ஒரு வீட்டில்!

காலத்தின் கோலத்தில் கட்டுண்ட நாம்
கடல் கடந்து பந்தாலும் எம் ஊரையும் உறவுகளையும் தான் மறப்போமா
எம் பெற்றோர் எமக்கு ஊட்டி வளர்த்த பண்பாட்டை தான் மறப்போமா
பத்தடி பனியிலும் பட்டெறிக்கும் வெயிலிலும் வேலை
வேலையென அலைந்தாலும் நாம் துள்ளி விளையாடிய
தோட்ட வெளிகளைதான் மறப்போமா
பழகிய நட்புக்களை தான் மறப்போமா
பந்தங்கள் பாசங்கள் பழைய நினைவுகள் இதயத்தை நனைக்குதம்மா
தன்னுலகை விட்டு வெளியுலகை கண்டு வார்த்தைகள் தவிக்குதம்மா
எதிர்கால இலட்சியங்கள் எண்ணற்ற கனவுகள் எல்லாமே கலைந்ததம்மா
வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் உணர்வுகள் இருக்குதம்மா
உயிர் காக்க ஊர் விட்டு ஓடினாலும் ஓடி வருவோம்
ஒருநாள் எம் ஊரையும் உறவுகளையும் தேடி.................

ஜெகன். மனோதர்சினி



பாதுகாப்பு வலையே இல்லாமல்
கயிற்றின் மேல் நடக்கிறீர்களா?
கவலை அற்ற
நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...
• Critical Illness Insurance
• Disability Insurance
• Dental & Drug Insurance
• Travel Insurance
• Non-Medical Insurance
• Mortgage Insurance
• Life Insurance Products
• RRSP'S & Investments
• RESP – Education Saving Plan
• Final Expense Products
(Through Funeral Homes)
Mega Financial Group
416 293 5559 • 416 666 1120
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON
INDUSTRIAL ALLIANCE
UL Mutual
Equitable Life of Canada
Desjardins
Canada Life
RBC Insurance
TRANSAMERICA
Manulife Financial
Empire Life
Sun Life Financial

வாழ்வில் உதைக்கும் தங்கள் கிரிமினல் குற்றப்பதிவுகளை கனடாவில் அழிப்பது எப்படி?



சிவ.பஞ்சலிங்கம், B.Com

என்றோ ஒரு நாள் தெரிந்தோ தெரியாமலோ கனடாவில் பொலிசாரின் கைதுகளிலும் விசாரணைகளிலும் சிக்கியிருந்த துரஅதிர்ஸ்டம் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அந்த நேரம்:

தங்கள் கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்பட்டிருக்கும். *[Finger Print Record]* அத்துடன் சேர்த்து கிரிமினல் சட்டம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டவராக தங்களின் படங்களும் எடுக்கப்பட்டிருக்கும்.

இவை யாவற்றுடனும் சேர்த்து தங்கள் பெயர் விபரங்கள் யாவும் குறிப்பிடப்பட்டு என்றோ ஒரு நாள் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபராக பொலிசாரின் மின் கணனி தகவல் மையத்தின் பதிவுகளில் இருக்கும்.

இது தங்களின் கனடா வாழ்வில் நடந்து ஒரு மறக்கப்பட்ட சம்பவமாக தற்போது இருக்கலாம். நீதிமன்றத்தின் விசாரணையில் குற்றச்சாட்டிலிருந்து சில நேரம் தப்பியும் இருக்கலாம். ஆனால்..........? குற்றம் சாட்டப்பட்ட போது பொலிசாரால் எடுக்கப்பட்ட,

கைவிரல் அடையாளங்கள்!, குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தங்கள் திருமுகங்கள்! பெயர் விபரங்கள்! யாவும் அகற்றப்படாது பொலீஸ் பதிவுகளில் தொடர்ந்து இருக்கும். என்றோ ஒருநாள் நடந்த பிரச்சனையில் எடுக்கப்பட்ட பதிவுகள் அகற்றப்படாதிருப்பது ஒரு பிரச்சனையில்லாத மாதிரியே தங்களுக்கு தென்படும். ஆனால் சில நேரங்களில் தொடர்ந்து அமைதியாக வாழும் ஒரு மனிதனின் வாழ்வில் இப் பதிவுகள் யாவும் நின்று, நின்று உதைக்கும் போது இதற்கு ஒரு தீர்வு இல்லையா? என ஏங்கப் பண்ணும்.

ஆனால் அதற்கு ஒரு தீர்வு உண்டு! தொடர்ந்து பிரச்சனையேதுமில்லாது சமூகத்தில் அமைதியாக வாழ்கின்றவர்கள் மற்றும் வாழ விரும்புவர்கள் தங்களுக்கு மனுச்செய்து இக்குற்றப் பதிவுகளை அழித்து விடுங்கள் என கனடாவின் பொலீஸ் பிரிவினர் அழைக்கின்றனர் என்பதனை அறிந்து கொண்டீர்களா?

இதனை ஆங்கிலத்தில்,
REQUEST FOR,"DESTRUCTION OF ADULT FINGER PRINTS, PHOTOGRAPHS AND RECORDS OF DISPOSITION "
என குறிப்பிடப்படும்.

ரொரன்ரோ நகர பொலீஸ் பிரிவுகளில் பதியப்பட்டிருக்கும் பதிவுகளை அகற்றும் இந்த கோரிக்கைக்கு எதுவிதமான பண செலவுமில்லை. வக்கீலின் தேவையும் இல்லை! எல்லாம் இலவசமாக செய்து முடிக்கலாம்.

பின்வரும் இணையதளத்தினுள் சென்று தகவல்களை அறிந்து கொள்வதுடன் விண்ணப்ப படிவத்தினையும் பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
www.torontopolice.on.ca/Publications/Files/Forms/FingerPrint_destruction.Pdf

விண்ணப்ப படிவத்தில் பின்வரும் கேள்விகளுக்கு பதில்கள் வழங்கப்படல் வேண்டும்

- பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு, மாதம், திகதி உட்பட கைது செய்யப்பட்டபோது வேறு பெயரில் இருந்தால் அது பற்றிய விபரங்கள்!

- ☛ வக்கீல் அல்லது முகவர் நியமித்தால் அது பற்றிய விபரங்கள்!
- ☛ குற்றச்சாட்டு தொடர்பான விபரங்கள்!
  (அதாவது இறுதியாக நீதிமன்றத்திற்கு சமூகம் அளித்த திகதி, நீதிமன்ற இடம், குற்றசாட்டு, தீர்ப்பு போன்றவை.)

மேற்குறிப்பிட்ட தகவல்களை இவ்விண்ணப்பத்தில் வழங்கி, பின்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

TORONTO POLICE SERVICE
40,COLLEGE STREET, TORONTO, ONTARIO M5G 2J3

தொலைநகல் மூலம் அனுப்புவதானால், Attention to: Criminal Records என குறிப்பிட்டு இம் மனுவினை (416) 808-8202 என்ற தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி விட்டால் சரி! விண்ணப்பம் கிடைத்ததும் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சி கடிதம் அனுப்பி வைப்பார்கள். தொடர்ந்து கடந்த வருடங்களில் கிரிமினல் குற்றசாட்டுகளில் ஈடுபடாது ஒழுங்கான பிரஜையாக வாழ்ந்து வருகின்றீர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்பு யாவற்றினையும் பூரணமாக அழித்து விட்டு அதனை தபாலில் தங்களுக்கு அறிவிப்பார்கள்! தங்களின் பிரச்சனைகள் யாவும் இலகுவில் முடிந்து விடும்.

ஆனால் இங்கு மனுச்செய்பவர் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(1) குற்றம் சாட்டப்பட்டவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(2) இறுதியாக நீதிமன்றத்திற்கு சமூகம் அளித்து குறைந்தது ஐந்து மாதங்கள் கடந்திருக்க வேண்டும். இக் காலங்களுக்குள் வேறு எந்த குற்றச் சாட்டுகளோ அல்லது நீதிமன்ற வழக்குகளோ நிலுவையில் இருத்தல் கூடாது.

சில நேரங்களில் தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்ற பதிலும் கடிதத்தில் வரலாம். அப்படி வந்திருந்தால் அது கிடைத்து 60 நாட்களுக்கிடையில் விரும்பினால் இதே பொலீஸ் பிரிவின் மேலிடத்திற்கு எழுத்தில் மேல் முறையீடு (Appeal) செய்யலாம். மேன்முறையீடு செய்யும் முகவரி:

THE MANAGER
RECORDS MANAGEMENT SERVICES
40,COLLEGE STREET,
TORONTO, ONTARIO M5G 2J3

இங்கு குறிப்பிடப்பட்ட ரொரன்ரோ நகரின் பொலிஸ் குற்றப்பதிவுகள் தவிர, கனடாவின் ஏனைய நகர பொலீஸ் பிரிவுகளில் பதியப்பட்ட குற்றப்பதிவுகள் என்றால் சற்று மாறுதலான சட்ட ஒழுங்கு விதிகளுடன் இதே மாதிரி விண்ணப்பித்து சகல பதிவுகளையும் அழிக்கலாம். மேலே குறிப்பிடப்பட்டது நீதிமன்றத்தினால் பாரிய நிலையில் தீர்ப்புகளினால் தண்டிக்கப்படாது பொலீஸ் பதிவுகளில் உள்ள குற்றசாட்டுகள் மட்டுமேயாகும்.
ஆனால் நீதிமன்றத்தில் என்றோ ஒரு நாள் பாரிய குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டவர் களின் குற்றங்களில் பதிவுகளை அழித்து, சட்டத்தின் முன்பு "மன்னிப்பு" (PARDON) என்பதனை நிரந்தரமாக பெறவேண்டுமாயின் மனுச் செய்ய வேண்டிய இடம் இதுவேயாகும். கனடாவின் தேசிய மன்னிப்புச்சபை என குறிப்பிடப்படும் இந்நிறுவனத்தின் விபரங்கள், விலாசங்கள் பின்வருமாறு

NATIONAL PAROLE BOARD
CLEMENCY & PARDONS DIVISION
410 LAURIE AVE. W., 5TH FLOOR
ONTTAWA, ONTARIO K1A 0R1
தொலைபேசி: 1800-874-2652

தண்டனை பெற்று குறைந்தது மூன்று வருடங்களின் பின்பே மனுசெய்யலாம்.

இங்கு மனுச்செய்ய வேண்டிய விண்ணப்பபடிவங்களை இவ் இணையதளத்திலிருந்து பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மனுச் செய்ய முன்பு பின்வரும் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்களில் பெற்று, அவற்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவை யாவன பின்வருமாறு:

(1) கைவிரல் அடையாளங்கள் எடுத்து கனடாவின் தலைநகரில் இருக்கும் ஆர். சி. எம். பி அலுவலகத்துக்கு அனுப்பி பதிவில் இருக்கும் கிரிமினல் தடயங்கள் யாவும் எவை என்பது பெற்றுக்கொள்ள வேண்டிய முதலாவது பத்திரம் ஆகும். (Proof of Convictions)

தங்களின் கைவிரல் அடையாளங்களை எடுத்து மின் அஞ்சல் மூலம் அனுப்பி, இப் பத்திரத்தினை எடுத்து தர உதவும் அலுவலகம் ரொரன்ரோவில் பின்வரும் விலாசத்திலி ருந்து செயல்படுகின்றது.

CANADIAN FINGERPRINTING SERVICES INC.,
305, MILNER AVENUE, SUITE # 103
SCARBOROUGH, ONTARIO M1B 3V4
Phone: 416-901-5608
Fax: 416- 901-8042

இவ் அலுவலகத்தினூடாக செய்து தரும் இப்பணிகளுக்கு சிறு கட்டணம் அறவிடுவார்கள். 120 நாட்களுக்கிடையில் பதிவில் உள்ள குற்றவியல் தடயங்கள் தபாலில் கிடைத்துவிடும்.

(2) விசாரணை நடந்த நீதிமன்றத்தின் அலுவலகத்தில் சிறு தொகை கட்டணம் செலுத்தி வழக்கு தொடர்பான விபரப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியது இரண்டாவது பத்திரம் ஆகும். (OBTAIN COURT DOCUMENTS).

(3) உள்ளூர் பொலீஸ் நிலையத்திற்கு சென்று மேலதிக குற்றச் சாட்டுகள் பதிவுகள் எதுவுமில்லை என்ற சான்றிதழ் பெற்று வைத்து கொள்ள வேண்டியது மூன்றாவது பத்திரம் ஆகும். (POLICE CHECKING RECORDS)

(4) ஆள் அடையாளத்தினை உறுதி செய்யும் அடையாள அட்டைகளின் பிரதிகள் எடுத்து வைத்திருக்க வேண்டியது நான்காவது பத்திரம். I(DENTIFICATIONS)

இவை யாவற்றினையும் விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து அவர்களுக்குரிய கட்டணத்து டன் (தற்போது $150) மேற் குறிப்பிட்ட கனடாவின் தேசிய மன்னிப்பு சபைக்கு (National Parole Board) அனுப்பிவைத்தால் சரி. பொலீஸ் பதிவுகளில் உள்ள குற்றங்கள் உட்பட சகல குற்றப்பிரிவுகளும் அழித்து மன்னிப்பு வழங்க தகுதியானவராக இருந்தால், அவை உறுதி செய்யப்பட்டு 18 மாதங்களுக்கு இடையில் கடிதங்களில் “மன்னிப்பு வழங்கப் பட்டது” என உறுதி செய்து வரும். இப் பதிவுகளை அழிக்காவிட்டால் மனிதனாக வாழ காலம் கடந்து ஞானம் வந்து விரும்பினாலும், பதிவில் இருக்கும் குற்ற பதிவுகள் வாழ்வின் முன்னேற்றத்தினை நின்று நின்று உதைக்கும்.







You're A Big Kid Now

Mithila Ruthran
Dongbu Elementary School English Teacher, South Korea
Bachelor of Science, University of Toronto

I graduated from the University of Toronto this June with a degree that I only half-liked. I crammed eleven half-credit courses into my last year of school because of my obsession with the idea of finishing my degree in four years rather than the new and trendy five or six. I've definitely made some mistakes in my university career, but I'm not planning on letting that burden my future plans.

I'm currently working in South Korea as an elementary school teacher in the city Yeongcheon near Daegu. I acquired this job soon after university by applying to a program called EPIK (English Program in South Korea). I'm now a well-respected English teacher who plans and executes her own lessons for grade 5 students. In this new place, I'm learning a different language, cultural traditions and I'm making friends with other English teachers from all over the world. Without a teachers' degree, I've gained access to a job I think is beneficial to help me save money to pay back my student loans, network with people from across the world and earn a sense of responsibility and maturity from living on my own in another country. Being here in South Korea, I also have the chance to travel to East Asian countries and explore another part of the world.

I came across this job opportunity by attending my university's career fair right after I had graduated. I think this goes to show that job opportunities are out there, but you have to find them and you have to work for them. Currently, I am applying to do my masters in Ontario and the process is by no means simple. That's how life is, I've come to realise. Things don't just happen to you, but if they do, you shouldn't let the opportunity pass you by. As I read on a wall hanging here in Korea, "The best opportunities are the ones you make for yourself". For a recent university graduate, those are definitely words to live by.

KALVIYANKADU.COM


GANAPASKAROTHYA CULTURAL ASSOCIATION



தாயக / புலம்பெயர்ந்த எமது மக்களால் நடாத்தப்படும்

- கோயில் விழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- விளையாட்டுப் போட்டிகள்
- மரண அறிவித்தல்கள்
- நினைவஞ்சலிகள்

அனைத்தும் இலவசமாக கல்வியங்காடு இணையத்தளத்திலும், முகப்புத்தகத்திலும் (**Facebook**) அறிவிக்கப்படும் என்பதை அன்புடன் அறித்தருகின்றோம்.



தொடர்புகளுக்கு :


kalviankadu@gmail.com

http://www.kalviyankadu.com/contact.htm

ஞானபாஸ்கரோதய சங்க இணைய நிர்வாகக்குழு.

கனடாவில் வாங்கிய புதிய வாகனத்தில் கோளாறுகள்! நியாயமாக தீர்வே காணமுடியவில்லை எங்கே? எப்படி? கனடாவில் தீர்வு காண்பது?





(Trouble In My Brand New Vehicle?)

சுப்பையா கணேஸ்
(வாகன தொழில் நுட்பவியலாளர்)

சில மாதங்கள்! அல்லது வாகனம் வாங்கி ஒரு சில வருடங்கள் மட்டும் கடந்துள்ளது என சொல்லலாம். திடீர் என சில கோளாறுகள்! வாகன கம்பனி உற்பத்தியாளரின் குறைபாட்டினால் ஏற்பட்டகோளாறுகள் (Automobile Manufacturing defects) என்பது மட்டும் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.ஆரம்பத்திலிருந்து உபயோகிக்கும் ஒரு சில கிலோ மீற்றர் தூரம் வரை அல்லது உபயோகிக்கும் முதல் சில வருடங்கள் வரை ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் இப் புதிய வாகனங்களை கம்பனியினால் இலவசமாக திருத்தி தரப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தினை (New vehicle warranty) கம்பனி நிச்சயமாக தந்திருக்கும். அந்த 'உத்தரவாதம்' என்ற வாக்குறுதியின் அடிப்படையில் வாகன கம்பனி விற்பனை முகவரிடம் (Company Vehicle Dealer) எடுத்து சென்று அதனை திருத்தி நிவர்த்தி செய்து கொள்ளலாம். அங்கும் நிவர்த்தி செய்யும் தீர்வு பூரணமாக திருப்தியாக கிடைக்கவில்லையாயின் கனடாவில் எங்கே போய் முறைப்பாடு செய்வது? எப்படி தீர்வு காண்பது?

கனடாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் அல்லது ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை கொண்டு கனடாவில் உருவமைக்கப்படும் வாகனங்கள், அல்லது ஏனைய நாடு ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு அந்நாட்டு கம்பனியின் பெயரால் விற்பனை செய்யப்படும் வாகனங்கள் எதுவாகவிருந்தாலும் அதனை புதிதாக வாங்கி உபயோகிக்கும் ஒருவர் எதிர்கொள்ளும் நியாயமான பிரச்சனைகளை விசாரித்து இதுவே சரியான தீர்வு! என முன்வைத்து வாடிக்கையாளர்களுக்கு உதவும் ஒரு நிறுவனம் கனடா முழுவதும் இயங்கி தீர்வு வழங்கி வருகின்றது. இவ்வாறு தீர்வு வழங்கும் இவ் மத்தியஸ்தர் நிறுவனத்தினை இயக்கும் ஒன்ராரியோ மாகாணத்தின் அலுவலகம் ரொறன்ரோவில் பின்வரும் விலாசத்தில் இயங்கி வருகின்றது.

CHNADIAN MOTOR VEHICLE ARBITRATION PLAN
(ONTARIO PROVINCIAL ADMINISTRTOR)
55,ST.CLAIR AVE-WEST,SUITE 255, TORONTO,ON. M4V 2Y7
தொலைபேசி: 1-800-207-0685 அல்லது (416)-921-2686
தொலைநகல்: (416)-967-6320 இணையத்தளம்: **www.camvap.ca**

இது கனடிய மத்திய, மாகாண, நகரசபை அரசுகளின் சட்டவிதிகளின் படி அமைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு நியாயமன்றம் ஆகும். புதிதாக வாகனங்களை வாங்கி உபயோகிக்கும் ஒரு வாடிக்கையாளர் விடயத்தில் தீர்ப்பு வழங்கினால் அது அப்பீல் பண்ண முடியாத தீர்ப்பாகவே இருக்கும். இவ்நிறுவனங்களின் தீர்ப்பினை வாகன கம்பனிகள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்பது நிபந்தனை ஆகும். இதுவரை காலமும் பல வாகன கம்பனிகளோடு ஏராளமான வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளன. வாடிக்கையாளரின் பிரச்சனையில் நியாயம் இல்லையேல் இவ் மத்தியஸ்தர் குழு முறைப்பாடுகளை நிராகரித்தும் உள்ளனர். இங்கு பொதுவாக வாடிக்கையாளார்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இரு வகையாக பிரிக்கலாம்.

(a) வாகனங்களின் உதிரிப்பாகங்களை கொண்டு உருவமைப்பதில் ஏற்பட்ட தவறுகளினால உருவாகும் கோளாறுகள்.(Manufacturing defects)
(b) புதிய வாகனத்தில் உத்தரவாதம் தொடர்பான பிணக்குகள் (Warrenty Disbute) இப்படி இந்த இரு விடயங்களிலும் பிரச்சனைகள் எழும்போது

(1) முதலில் வாகனம் வாங்கிய கம்பனியில் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்தல் வேண்டும் (Talk with your dealer first)
(2) அங்கும் சரியான தீர்வு கிடைக்காவிட்டால் வாகன உற்பத்தி செய்யப்பட்ட கம்பனி வாடிக்கையாளர் உதவிப் பிரிவுக்கு (Manufacturer's Customer Assistance Center) இம்முறைப் பாட்டினை இரண்டாவதாக எடுத்துச் செல்லவேண்டும்.
(3) அங்கும் தீர்வு இல்லையேல் இறுதியாக சரியான தீர்வு காணும் இடமே இந் நியாய மன்றம் ஆகும்.

தீர்வுகள் என்பது பின்வருமாறு அமையும்:

- வாகனத்தினை திருத்தி கொடுத்தல் வேண்டும்.

- காலதாமதம் காரணமாக உரிமையாளர் வாகனத்தினை தமது சொந்த பணம் கொடுத்து ஏற்கனவே திருத்தியிருந்தால் அந்த பணம் முழுவதும் திருப்பி வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும். (Reimburse Repair Expenses) மேலதிக செலவுகள் வாடிக்கையாளருக்கு ஏற்பட்டிருந்தால் அதனையும் திருப்பி வழங்குதல் வேண்டும்.

(உதாரணமாக ஓடாமல் வாகனம் வீதியில் நின்றிருந்தால் நின்ற இடத்திலிருந்து கட்டி இழுத்து கொண்டு போன செலவு (Towing Charge) வாகனம் இடையில் நின்றதால் வாகன உரிமையாளருந்து ஏற்பட்ட ராக்ஸி, வாடகைக் கார் செலவுகள் வாகனம் தரித்து நின்ற செலவுகள் (Parking Charge) மற்றும் கோளாறுகள் எது என்பதனை கண்டறிந்த (Diagnostic testing) செலவுகளை குறிப்பிடலாம். இதற்கு ஆக கூடுதலாக $500 டொலர் வரையே வழங்குவார்கள்.)

- வாகனத்தினை கம்பனியே திருப்பி விலைகொடுத்து வாங்குமாறு உத்தரவிடுதல். (Buy Back Order)

சரி! வாகனம் எந்த தகைமைக்குள் இருந்தால் இம்முறைப்பாடுகளை முன்னெடுத்து செல்லலாம்

(1) கடந்த நான்கு வருடங்களுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமாக இருத்தல் வேண்டும்.
(2) 60,000 கி.மீற்றருக்குள் உபயோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
(3) வாகன கம்பனி விற்பனை முகவர் (Dealer) பிரிவினால் தீர்வு வழங்கப்படாத நிலையில் மேன்முறையீடு செய்யும் நிலையில் இருத்தல் வேண்டும்.
(4) ஏதாவது வர்த்தக நோக்கத்திற்கு வாகனம் உபயோகிக்கப்படாத நிலையில் இருத்தல் வேண்டும்.







மரணசாசன பத்திரம்



மரண சாசன பத்திரம் எழுதி வைக்காது மரணித்த அந்த மனிதன்!..... முடிவு என்ன?

Death Without Last Will & Testament

தயா சுப்பிரமணியம்

நடுவயதில் மரணித்த அந்த மனிதன் மரண செய்தி! அவரை அறிவிந்தவர்கள் யாவரினையும் ஒரு கணம் அதிர்ச்சியில் உலுப்பியிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனையோரை கவர்ந்து இழுக்கும் மனிதாபிமானங்கள் நிறைந்த சுபாவங்கள், அதனை வெளிகொணரும் தோற்றங்கள்.

நல்லதொரு பொறுப்பான குடும்ப தலைவன், பழகியவர்களுக்கு நல்ல நண்பன், கனடா வாழ்வில் வழிகாட்டும் வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள், யாவற்றினையும் முறையாக பயன்படுத்தி, நேரியவழியில் தமது வர்த்தகத்தினை முன்னேடுத்து சென்று தமது சிந்தனையாலும் திட்டமிட்ட செயல்பாடுகளினாலும் செல்வம் பெருகும் வாழ்வின் உன்னத நிலைமைக்கு சென்று கொண்டிருந்த ஒரு நல்ல ஆத்மாவினை எமதர்மராஜன் பின்னால் துரத்தி உயிரைப்பறித்தான் என்ற மாதிரி தொழில் செய்த இடத்தில் விபத்தின்போது அவர் வாழ்வும் முடிந்து விட்டது.

சரி! அவரது மரணச்சடங்குகளும் துயரங்களுடன் முடிந்து விட்டது. அந்த துயரங்களுக்கு சிறு நிவாரணமாக ஆயுள்காப்புறுதியும் கைகொடுத்து துயரங்களுடன் அவரது குடம்பத்தவர்களின் வாழ்வும் தொடர்ந்தது.

தமது குடும்பத்தவர்களின் தொடர்வாழ்விற்க்காக திட்டமிட்டு கனடா வாழ்வில் தமது வளங்களை வளர்த்த அந்த மனிதன் செய்திருக்க வேண்டிய அந்த சிறு வேலையினை செய்து வைக்காமல் மரணித்திருந்தது அவரது மரணத்தின் பின்பு வாழ்வினை தொடரும் அவரது குடும்பத்தவர்களின் வாழ்வில் மெல்ல மெல்ல துயரம் கலந்த வேதனையிலும் உதைக்க தொடங்கியது.

- மிகப்பெரிய அவரது சொந்த குடியிருப்பு மனை அவரது பெயரில் மட்டும் இருந்தது
- இன்னொரு வீடு! அதுவும் அவரது பெயரில் மட்டும் இருந்தது
- இன்னொரு நகரில் வாங்கிய நிலம்! வாகனங்கள் வங்கி கணக்கு யாவும் அவரது பெயரில் மட்டும் இருந்திருந்தது ஆனால்!

“மரணசாசன பத்திரம்” (Last will and Testament) என்ற ஒரு பத்திரத்தினை தம் வாழ்வின் முடிவின் பின்பு குடும்பத்தவர்களுக்கு போக வேண்டிய தமது சொத்துக்கள், உடமைகள் சட்டரீதியாக போய்சேர்வதற்கு உருவாக்கி வைக்க தவறியது அவரது பாரிய தப்பு முடிவு என்ன?

கனடாவின் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் நிர்வாகியினால் (Court Appointed Administrator) அவரது உடமைகள் யாவும் பொறுப்பெடுத்து பரிசீலிக்கப்பட்டு கனடாவில் அவரால் செலுத்தப்படாத கொடுப்பனவுள் எவையோனும் இருந்தால் அவையாவும் கொடுத்து தீர்க்கப்பட்டு மிகுதியாவும் மனைவி, பிள்ளைகள், சிலநேரங்களில் வேறு எவராவது சட்டரிதியான உறவுகள் என இருந்தால் அவர்கள் யாவருக்கும் சமமாக பகிர்ந்து அவர்களின் பெயரில் நீதிமன்ற ஒழுங்கு முறைப்படி மாற்றம் செய்யப்படும். சட்டரீதியாக மாற்றம் செய்யப்பட்டாலும் பிள்ளைகள் 18 வயது வரும் வரை அதனை அவர்கள் விற்பனை செய்யவும் முடியாது.

செலுத்தப்படாத கொடுப்பனவுள் எவையோனும் இருந்தால் அவையாவும் கொடுத்து தீர்க்கப்பட்டு மிகுதியாவும் மனைவி, பிள்ளைகள், சிலநேரங்களில் வேறு எவராவது சட்டரிதியான உறவுகள் என இருந்தால் அவர்கள் யாவருக்கும் சமமாக பகிர்ந்து அவர்களின் பெயரில் நீதிமன்ற ஒழுங்கு முறைப்படி மாற்றம் செய்யப்படும். சட்டரீதியாக மாற்றம் செய்யப்பட்டாலும் பிள்ளைகள் 18 வயது வரும் வரை அதனை அவர்கள் விற்பனை செய்யவும் முடியாது.



இவையாவற்றுக்கும் செலவழிக்கும்
- நீதிமன்ற செலவுகள் (Court Probation Fees)
- வக்கீல் செலவுகள் (Lawyer Fees)
அவற்றுடன் சேர்ந்த அலைச்சல்

இது தேவைதானா? இங்கு படித்துக் கொண்ட பாடம் என்ன?
"மரணசாசன பத்திரம்" என்ற கல்லறையில் தூங்கிக்கொண்டும் வழிநடத்தக் கூடிய சட்டரீதியான ஆவணத்தினை முன் கூட்டியே செய்து வைக்க தவறியமையே ஆகும்.

சரி! இனி விடயத்திற்கு வருவோம்! இந்த மரண சாசன பத்திரம் (Last Will and Testament) என்றால் என்ன?

எங்கள் மரணத்தின் பின்பு எங்கள் பெயரில் உள்ள வங்கிக் கணக்குகள், வீடு, சொத்துகள் யாவும், எவர் எவருக்கு, முழுவதுமாகவே அல்லது விகிதாரசார அடிப்படையிலே பகிர்ந்து வழங்கப்படல் வேண்டும் என உயிரோடு இருக்கும் போதே எழுதிவைக்கும் சட்டரீதியான ஆவணம் ஆகும்.

- பிள்ளைகள் 18 வயதிற்கு குறைந்தவர்களாக இருந்தால் (Mionr Age Children) அதற்கான ஒரு நம்பிக்கையான பொறுப்பாளரை (Guardian) இவ்ஆவணத்தில் குறிப்பிடு வதுடன் இவற்றினை சரியான முறையில் நிறைவேற்றி வைப்பதற்கு என ஒரு நிர்வாகியினை (Appoint Someone you trust to administer your estate) முன்கூட்டியயே நியமித்து வைக்கலாம் அனேகமாக பாரிய சொத்துகளுக்கு சொந்தமாக இருப்பவர்கள் தங்களின் நம்பிக்கைக்குரிய பிரபல்யமான சட்ட நிர்வனங்களை ஆவணத்தில் குறிப்பிடுவது வழமையாகும்.

- எழுதி வைக்கப்பட்ட இவ் இறுதி ஆவணத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டுமாயின் தாங்கள் காலத்திற்கு காலம் உயிரோடு இருக்கும்போதே மாற்றம் செய்து கொள்ளும் உரிமை தாராளமாக அவரவர்க்கு உண்டு

- கணவன், மனைவி கூட்டாகவும் இவ் ஆவணம் தயாரித்து வைத்திருக்கலாம். ஆனால் திருத்தமும் கூட்டாகவே செய்து கெள்ளவேண்டும். ஒருவரின் மரணத்தின் பின்பு மற்றவர் அதில் திருத்தங்கள், மாற்றங்கள் செய்ய முடியாது. எதற்கும் தனித் தனி ஆவணம் சிறந்தது.

- தம்பதிகளுக்கிடையே விவாகரத்து சட்டரீதியாக ஏற்பட்டால் எழுதிவைக்கப்பட்ட இம் மரண சாசன பத்திரம் கனடாவில் சிலஇடங்களில் காலாவதியாகியும் போகலாம். (Revoke Previous Will) காலாவதியாமல் போகாமலும் இருக்கலாம். (Not Revoke Previous Bill) ஏனெனில் கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம், நகரசபைக்கு நகரசபை சட்டங்களில் வெவ்வேறு வரைவிலக்கணம் உண்டு. அப்படி ஒரு விவாகரத்து ஏற்பட்டால் ஆவணத்தினை ரத்து செய்து புதிய ஆவணத்தினை உருவாக்கி கொள்வதே சாலச் சிறந்தது என கனடாவின் சட்ட ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள்.

- ஆனால் ஆயுட்காப்புறுதி ஒப்பந்தத்தில் இந்த மரணசாசன பத்திரம் உதவமாட்டாது. ஆயுட் காப்புறுதி ஒப்பந்களிலிருந்து பணத்தினை பெற உரித்துடையவர் எவர் என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதோ அவர் மட்டுமே அதிலிருந்து பணத்தினை பெறலாம். இங்கு மரண சாசன பத்திரத்தில் எனது பெயர் குறிப்பிட்டுளதென வாதாட முடியாது. அதே மாதிரியே சில ஓய்வுதிய திட்டங்களிலும் மரணத்தின் பின்பு எவர் பெயரென அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதோ அவர் மட்டுமே பெற உரித்துடையவர்கள் ஆவார்கள். விரும்பினால் உயிரோடு இருக்கும்போதே இவை களில் மாற்றம் செய்யலாம்.

- சிலர் தங்கள் மரணச்சடங்குகள் எப்படி செய்யவேண்டுமென்பதையும் இவ் ஆவணத்தில் குறிப்பிட்டு வைப்பது உண்டு. இதே நேரம் சில தேவையற்ற நிபந்தனைகளை இங்கு குறிப்பிட முடியாது எனவும் பல இடங்களில் கனடாவின் சட்ட ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- இவ்ஆவணத்தினை அவரவர் தாமாகவும் உருவாக்கி வைக்கலாம். ஆனால் வக்கீலின் உதவி யுடன் சட்டரீதியான வார்த்தைகள், வசனங்களை குறிப்பிட்டு (Legal Words, Phrases) அவர்களின் சாட்சிகள், கையொப்பங்களுடன் உருவாக்கி வைப்பது வலிமையாதாக இருக்கும்

சொத்துகளில் கூட்டாக உரிமை இருந்தால் (Jointly Owned) இந்த "மரணசாசனப் பத்திரம்" தேவையா?

குடியிருக்கும் வீடு, வங்கிக் கணக்குகள் யாவும் கணவன், மனைவி சேர்ந்து கூட்டாக இருந்தால் ஒருவரின் மரணத்தின் பின்பு அடுத்தவருக்கு உரிமை என்பது பிரச்சனையில்லாமல் மாற்றப்படும்.

இந்த நிலைமையில் இருப்பவர்களுக்கு மரணசாசன பத்திரம் பெரிதாக தேவைப்படாது. ஆனால் மரணமாகிய பெயரில் உள்ள வாகனம், காசோலை இவைகளை மாற்றம் செய்யப்போகும் இடங்கள் உற்பட பல்வேறு இடங்களிலும் கேட்கப்படும் முதல் கேள்வி Do You Have will அதவாது மரண சாசனபத்திரம் இருக்கின்றதா? என்ற மெதுவான ஆங்கில வசனம், அது இல்லை எனில் I am Very Sorry என்ற பணிவான பதில் வரும். இது பலரால் கனடாவில் எதிர் கொண்ட அனுபவமாகும் இறுதியான முடிவு

இவ் ஆவணம் இதுவரை தயாரித்து வைக்கவில்லையானல் உடனடியாக செய்து வையுங்கள் ஏனெனில் அடுத்த வாழும் தலைமுறைக்கு சொத்துக்கள், உடைமைகளில், பிரச்சனைகள், தலையிடிகள் வைத்து விட்டு பரலோகம் போய்சேர்வது என்பது போய்சேரும் ஆத்மாவினையும் அலைக்கும். நாம்யாவரும் வாழ்வில் சிரஞ்சீவிகள் அல்ல.

Fox & Fiddle group of restaurants

20th Anniversary Est. 1989

Fox AND Fiddle PRECINCT



Tel: (416) 207 - 9990

Fax: (416) 207 - 0995

Email: foxprecinct@gmail.com

www.foxandfiddle.com

4946A Dundas St. West, Etobicoke, ON. M9A 1B6

கோடைகால ஒன்றுகூடல்


















மண்ணின் வாசனை











கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்-கனடா

ஆரம்பகால நிர்வாகசபை உறுப்பினர்கள் (22.07.2007 - 26.03.2011)

தலைவர்:	திரு.குமரேசு புஸ்பராசா
உப-தலைவர்:	திரு.நாகராசா மனோகரன்
செயலாளர்:	திரு.நடராஜா ஜெயக்குமார்
உப-செயளாளர்:	திரு.தம்பையா சம்பந்தர்
பொருளாளர்:	திரு.சின்னத்தம்பி பரஞ்சோதி
உப-பொருளாளர்:	திரு.மகாதேவா செல்வரட்னம்

நிர்வாக உறுப்பினர்கள்:

திரு.துரைமணி ரவிச்சந்திரன்
திரு.நடராசா புவனேந்திரன்
திரு.நடராஜா ஜெயதிலகன்
திரு.சண்முகராசா ஜீவநாதன்
திரு.பரராசசிங்கம் நடனசிகாமணி
திரு.அப்பாக்குட்டி கமலேந்திரன்
திரு.கனகலிங்கம் அஜந்தன்
திரு.சுப்பையா தியாகராசா
திரு.நித்தியானந்தன் கிரிதரன்

கணக்காய்வாளர்கள்:

திரு.வேலாயுதபிள்ளை சுரேஸ்குமார்
திரு.இராசையா பாக்கியநாதன்

காப்பாளர்:
திரு.சுப்பையா கணேஸ்.


BUILD YOUR DREAM SYSTEM TODAY!
www.fortunecomputer.com
HEADSETS
LCD MONITORS
SPEAKERS
Fortune Computers
MICE
PROCESSORS
MOTHERBOARDS
MEMORY
KEYBOARDS
VIDEO CARDS
Your Friendly Computer Store
THE COOLEST DESKTOP TOWERS
HARD DRIVES
Find All The Leading Brands Here
NVIDIA
ATI RADEON GRAPHICS
REPUBLIC OF GAMERS
Kingston
GIGABYTE
WD Western Digital
OCZ
CREATIVE
Thermaltake
Seagate
intel
AMD
COOLER MASTER
Logitech
X-Fi XTREME FIDELITY

Paradise Print 416.288.6449